கீதாசார்யன்

Volume - 46
Issue - 11


AUG - 2024
குரோதி - ஆவணி
Rs.25/-



ஸ்ரீ அலர்மேல்மங்கைத் தாயார் - திருவெள்ளக்குளம்

கீதாசார்யன் 551

कर्मण्येवाधिकारस्ते मा फलेषु कदाचन



ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

ஆழ்வார்கள் வாழி அருளிச்செயல் வாழி
தாழ்வாதுமில் குரவர் தாம் வாழி – ஏழ்பாரும்
உய்ய அவர்கள் உரைத்தவைகள்தாம் வாழி
செய்யமறை தன்னுடனே சேர்ந்து.

ஆண்டு **46**	நம்மாழ்வார் ஆண்டு 5125 குரோதி ஆவணி (ஆகஸ்டு 2024)	இதழ் **11**

நல்வார்த்தைத் திரள்

ஸ்ரீமதுபயவேதாந்த மஹாவித்வான் காஞ்சீ ப்ரதிவாதி பயங்கரம்

அண்ணங்கராசார்ய ஸ்வாமி

ஸதேவ ஸோம்ய இதமக்ர ஆஸீத்

“ஸதேவ ஸோம்ய இதமக்ர ஆஸீத்”, “அஸத்வா இதமக்ர ஆஸீத்” என்று வெவ்வேறு உபநிஷத்துக்களில் இவ்விரண்டு வாக்கியங்களைக் காண்கிறோம். முன்னே ஸத்துதான் இருந்ததென்று முந்தின வாக்கியம் கூறுகிறது, முன்னே அஸத்துதானிருந்ததென்று பிந்தின வாக்கியம் கூறுகின்றது. (ஸத்) என்பதற்கு உள்ள பொருள் என்று அர்த்தம்; (அஸத்) என்பதற்கு இல்லாத பொருள் என்று அர்த்தம். இல்லாத பொருள் இருந்ததென்றால் இது எப்படி பொருந்தும்? மலடி மகனிருந்தான், ஆகாசத் தாமரை யிருந்தது, முயற்கொம்பு இருந்தது என்னுமாபோலே யன்றோ இல்லாத பொருள் இருந்தது என்கிற இவ்வார்த்தையும். இதை எப்படிப் பொருந்த விடுகிறது? என்று கேள்வி யுண்டாகக் கூடியது.



இதற்கு ஒருவிதமாக ஸமாதானம் கூற முன்வரலாம். இல்லாத பொருள்தான் முன்னே யிருந்தது என்பதாக இவ்வாக்யத்திற்கு அர்த்தமன்று. “இதம் அக்ரே அஸத் ஆஸீத்” என்று யோஜித்து, (இப்போது காணப்படுகிற இந்த விஸ்தீர்ணமான

பிரபஞ்சமெல்லாம் முன்பு சூந்யமாகவே யிருந்தது'' என்பதாக அர்த்தம் கொண்டால் பொருந்தாமை யொன்றுமில்லை, ஒன்றுமே யில்லாததாக நாம் நெடுநாள் பார்த்தவிடங்களில் கொடி செடி மரங்கள் முளைப்பதும், பெருப் பெருத்த விடுகள் கட்டப்படுவதும் காண்பதனால் ''இதம் அக்ரே அஸத் ஆஸீத்'' என்பதில் குறையில்லை யென்று சொல்லிவிடலாம்.

ஆனாலும், நம்முடைய ஸித்தாந்தத்தில் ஸத், அஸத் என்னுஞ் சொற்களின் பொருளை உள்ளபடி உணரவேண்டும். ''ஸதேவ நீயதே வ்யக்திம் அஸதஸ் ஸம்பவ: குத:'' என்பது நமது ஸித்தாந்தத்தின் ஸாரமான வார்த்தை. இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ளக்கூடியது என்னவென்றால், ஸத் என்கிற சொல்லுக்கு ஸ்தூலமான பொருள் என்று அர்த்தம். அஸத் என்கிற சொல்லுக்கு ஸூக்ஷ்மமான பொருள் என்று அர்த்தம், ஸூக்ஷ்மாகாரத்தை யுடையதாயிருந்த வஸ்து ஸ்தூலாகாரத்தை யடைகின்றது. இதைத் தான் உத்பத்தியென்று சொல்லுகிறோம். ஸ்தூலாகாரத்தை விட்டு ஸக்ஷ்மாகாரத்தை யடைந்துவிட்டால் அதைத்தான் விநாசமென்று சொல்லுகிறோம்.

வடமொழியில் ''பஞ்சதா'' என்று மரணத்திற்குப் பெயர் வைக்கப்பட்டிருக்கின்றது. இதன் மருமம் என்னவென்பதை உய்த்துணர வேணும், கேண்மின்; நம்முடையவுடல் ஐந்து பொருள்களாலாக்கப்பட்டது. *மண்ணாய் நீரெரிகால் மஞ்சுலாவு மாகாசமுமாம் புண்ணாராக்கை* எனறும் *மஞ்சு சேர் வானெரி நீர் நிலம் காலிவை மயங்கி நின்ற அஞ்சு சேராக்கை* என்றுமுள்ள திருமங்கையாழ்வாரருளிச்செயலின்படி நிலம் நீர் தீ கால் விசும்பாகிய பஞ்சபூதங்கள் ஒன்று சேர்ந்து சரீரமென வழங்கப்படுகின்றது. ஸூக்ஷ்மாவஸ்தையிலிருந்த பஞ்சபூதங்கள் ஸ்தூலாவஸ்தையையடைந்தால் அதுதான் பிறப்பென்றும் ஜனனமென்றும் சொல்லப்படுகின்றதென்றதாயிற்று. இனி மரணமென்பது யாதெனில், இதுவரை ஸ்தூலாவஸ்தையை யடைந்திருந்த பஞ்ச பூதங்கள் அவ்வவஸ்தையை விட்டு மீண்டும் ஸூக்ஷ்மாவஸ்தையை பஜிப்பதுதான் மரணமெனப்படுகின்றது. ஐந்து பூதங்களும் ஒன்று சேர்ந்திருந்த நிலைமை மாறி ஐந்தாகப் பிரியலுற்ற நிலைமையே மரணமென்று தேறிற்று. இதையிட்டே மரணத்தைப் பஞ்சதா என்று வழங்குகின்றனர் வடமொழியாளர்.

இதனால் நாம் தெரிந்து கொண்டது என்ன? இல்லாததொரு வஸ்து உண்டாவதுமில்லை; உள்ளதொரு வஸ்து அழிந்து போவதுமில்லை. ஒரவஸ்தையை விட்டு மற்றோரவஸ்தையை யடைவதுதான் உத்பத்தி யென்றும் விநாசமென்றும் வழங்கப் பெறுகின்றது. பஞ்ச பூதங்களுக்கு ஸ்தூலாவஸ்தையும் ஸூக்ஷ்மாவஸ்தையும் மாறி மாறி வருகின்றன. ஸ்தூலாவஸ்தையிலிருக்கும்போது ஸத்து எனப்படுகின்றது. ஸூக்ஷ்மாவஸ்தையில் சேரும்போது அஸத்தெனப்படுகின்றது.

பகவத்கீதை இரண்டாமத்யாயத்தில் *ஜாதஸ்ய ஹி த்ருவோ ம்ருத்யு: த்ருவம் ஜந்ம ம்ருதஸ்ய ச* என்றொரு ச்லோகமுள்ளது. இதில் பிறக்கிற வஸ்துக்களுக்கெல்லாம் ம்ருத்யு நிச்சயமென்றும், மருத்யுவை யடைந்த வஸ்துக்களுக்கெல்லாம் பிறப்பு நிச்சயமென்றும் சொல்லப்படுகிறது. இங்கே சிலர் சங்கிப்பதுண்டு. பிறக்கிற வஸ்துக்களுக்கெல்லாம் ம்ருத்யு நிச்சயமென்றால் இது பொருத்தமே. ம்ருத்யுவையடைந்த வஸ்துக்களுக்கெல்லாம் பிறப்பு

நிச்சயமென்றால் பொருந்துமோ? அந்த பகவத் கீதையிலேயே சில அதிகாரிகளைப் பற்றிச் சொல்லும்போது *த்யக்த்வா தேஹம் புநர்ஜந்ம நைதி மாமேதி ஸோர்ஜுந* என்று புநர்ஜன்மமில்லையாகச் சொல்லப்படுகிறதன்றோ! *'மாமுபேத்ய து கௌந்தேய புநர்ஜந்ம ந வித்யதே* என்றும் சொல்லப்பட்டுள்ளதன்றோ! ஆகவே கீழே யெடுத்துக் காட்டிய கீதா ச்லோகத்தில் *த்ருவம் ஜந்ம ம்ருதஸ்ய* என்று சொல்லியிருப்பது எங்ஙனே பொருந்தும்? என்று சங்கையேற்படுகிறது.

இது ஸர்வாத்மநா அஸ்தாநே சங்கையாகும். ஜாதம் என்கிற சப்தத்தினால் விவக்ஷிதமான வஸ்து எது? ம்ருதம் என்கிற சப்தத்தினால் விவக்ஷிதமான வஸ்து எது? என்று ஆராய்ந்துணர்ந்தால் இந்த சங்கை யுதிக்க ப்ரஸக்தியே யிராது, ஆத்மாவுக்கு ஜன்முமமில்லை மரணமுமில்லை. அது ஸ்வரூபதோ நித்யமான வஸ்து. ஜன்ம மரணங்கள் சரீரத்திற்கே யுண்டாவன. ஆகவே ஜன்மமடைந்த தேஹம் நசிப்பதும், நசித்த தேஹம் மீண்டும் ஜன்மமடைவதம் ஸம்பாவிதமே யொழிய அஸம்பாவிதமன்று. ஒருகால் ஸத்து எனப்பட்டு மற்றொருகால் அஸத்தெனப்படுவது ஸதத விகார சீலமான அஸத்துக்கே யாதலால் *ஜாதஸ்ய ஹி த்ருவோ ம்ருத்யு:* என்றதும் *த்ருவம் ஜந்ம ம்ருதஸ்ய ச* என்றதும் எளிதாகப் பொருந்துமென்க. (தொடரும்,.)

திவ்யப்பிரபந்தத்தின் பொருளை அறிந்து கொள்ளுங்கள் M.A. பட்டமும் பெறுங்கள்

தஞ்சை சாஸ்த்ரா பல்கலைக் கழகத்தில் தொலைதூரக் கல்வி மையம் மூலம் **M.A.** திவ்யப்பிரபந்தம் என்ற பட்டப்படிப்பு நடைபெற்று வருகிறது. திருவாய்மொழி ஆயிரம் பாசுரங்கள் மற்றும் மூவாயிரத்தில் முக்கியமான பாசுரங்கள் ஆகியவற்றின் விளக்கங்கள் பாடத்திட்டத்தில் இடம் பெற்றுள்ளன. அவரவர்கள் இல்லத்தில் இருந்து கொண்டே கற்கக் கூடிய இவ்வகுப்பில் சேருவதற்கு B.A., B.Sc., B.Com அல்லது B.Lit போன்ற ஏதாவதொரு இளங்கலை (Bachelor Degree) படித்திருக்க வேண்டும். வயது வரம்பு இல்லை. சாஸ்த்ரா பல்கலைக் கழகத்தின் இணையதளத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

கீதாசார்யன் பத்திரிகைக்கு சந்தா செலுத்துபவர்கள் பின்கண்ட வங்கியின் (எந்த ஊரிலும்) எந்தக் கிளையிலும் கீதாசார்யன் சந்தா செலுத்தலாம்: **Account in the Name of GEETHACHARYAN TRUST, Punjab National Bank A/c No. 0346000100121239 IFSC: PUNB0034600.** இங்குள்ள **QR Code** மூலமாகவும் சந்தா செலுத்தலாம். சந்தா செலுத்திய விவரத்தை, கீதாசார்யன் அலுவலகத்திற்குத் தொலைபேசி மூலமாகவோ, SMS, Whatsup, கடிதம், geethacharyan@yahoo.com க்கு E-mail மூலமாகவோ தெரிவிக்க வேண்டும். தொலைபேசி மற்றும் Whatsup எண் : **9444911192** (காலை 11 மணிமுதல் மாலை 4 மணி வரை மட்டும். ஞாயிற்றுக் கிழமை விடுமுறை.) மணியார்டர்/டி.டி./ உள்ளூர் காசோலைகள் மூலமும் சந்தா செலுத்தலாம்.

இரண்டு வருடச் சந்தா ரூ. 500/-
பத்து வருடச் சந்தா ரூ. 2500/-

உதகபாங்தியின் உட்பொருள்

ஸ்ரீமதுபயவே. வில்லூர் நடாதூர் ஸ்ரீபாஷ்யஸிம்ஹாஸனம் சாஸ்த்ரஸாஹிதீவல்லப
கருணாகராசார்யஸ்வாமி

இந்த ச்லோகத்தை தமது தமது தத்வர்த்தசிந்தாமணியில் வ்யாக்யானம் செய்து விட்டு நிறைவாக ஸ்ரீமதுபயவே பத்மவிபூஷணம் காஞ்சீ ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்ராசார்யஸ்வாமி முத்தாய்ப்பாக அருளிடுவதைக் காண்மின் (இதில் அடைப்புக் குறிக்குள் உள்ள பகுதிகள் தற்காலத்தவர் வஸதிக்காக அடியேனின் தமிழ் மொழி பெயர்ப்பு). : –

''த்வகிந்த்ரியத்துக்கு (தோலாகிய புலனுக்குத்) வ்ருத்தி–(தொழில்) தொடுகையும் தழுவதலும்; சக்ஷுரிந்த்யத்திற்கு (கண்ணாகிய புலனுக்கு) வ்ருத்தி–(தொழில்) தர்சனம்(காண்பது), ரஸனேந்த்ரியத்துக்கு (நாக்காகின்ற புலனுக்குத் வ்ருத்தி (தொழில்) ஆஸ்வாதனம் (சுவைத்தல்) ச்ரவணேந்த்ரியத்துக்கு (செவி ஆகிய புலனுக்குத்) வ்ருத்தி–(தொழில்) சப்தஸாக்ஷாத்காரம் (ஒலியை ஓர்தல்) க்ராணேந்த்ரியத்துக்கு (மூக்காகிய புலனுக்குத்) வ்ருத்தி–(தொழில்)ஆக்ராணம்(முகர்வது) என்று இப்புடைகளில் ஓரோ இந்த்ரியத்துக்கு ஓரோ வ்ருத்திகள் வ்யவஸ்திதமாய் இருக்கும்படியான நிலை குலைந்து ஒரு இந்த்ரியம் மற்றோர் இந்த்ரியத்தின் வ்ருத்தியை ஆசைப் படுவதாய் அலமந்து பெரு மிடறு செய்து கூப்பிடும் படியான பக்திப் பெருங்காதலின் உன்மஸ்தக தசையை அடியேன் அடைந்தேனாம்படி அருள் செய்திடாய்'' என்கிறார்.

இப்படிப் பட்ட தசை நிலைமை தானே கடோபநிஷத் காட்டும் *ஶ்*ரேயோ நிலை. அதற்கு அழைத்துச் செல்ல வேண்டும் எனப் புலன்களையே விளித்து வேண்டுவதாக இம் மந்திரத்தின் முதல் அடியான ''பத்ரான்ன*ஶ் ஶ்*ரேயஸ் ஸமநைஷ்ட தேவா:!'' என்ற பகுதியிலே வேண்டினான் வேதத்தாழ்வான்.

அந்த நிலையை அடியேன் அடைய அருளிட வேண்டும் என்று பேரருளாளனையே விளித்து வேண்டிடுகிறார் கூரத்தாழ்வான். இந்த வாசியைக் கருத்திலே கொள்ளுங்கள்.

வேதத்தாழ்வான் வேண்டுதலைக் கேட்டவாறே புலன்கள் ''எங்களை வேண்டுவதில் என்ன பயன்? நாங்களே அவன் அடிமைகள். அவன் இயக்கிட இயங்கிடுபவர்கள். எனவே அவனையே நேராகக் கேட்பாயாக. பிச்சைக் காரனிடம் பிச்சை கேட்பதை விட அவனுக்குப் பிச்சை இட்டவரிடமே பிச்சை புகுவது அல்லவோ கிறி அதாவது நலம் தரும் நற்செயல்'' என்றன போலும்!

எனவே எம்பெருமானையே நோக்கி (கூரத்தாழ்வான் செய்தது போல்) இரக்கத் தொடங்கிடுகிறான் வேதத்தாழ்வான் ''த்வயாவஸேன ஸம*ஶீ* மஹி த்வா'' என்ற இரண்டாம் அடியிலே.

த்வயா அவஸேன என்ற இரு சொற்கள் அவஸமாகிற உன்னால் என்ற பொருளில் அமைகின்றன.

அவஸம் என்ற சொல் புத்துணர்வு தரும் பானகம் போன்ற பானத்தைச் சொல்லும். அவ என்பது பாதுகாத்தல் என்பதைச் சொல்லும் வினைவேர். அதனுடன் அஸச் என்கிற விகுதி இணைகையில் அவஸம் என்ற சொல் உருவாகும். அப்பொழுது அது உயிரைப் பாதுகாத்துப புத்துணர்வு தரும் பானத்தைக் குறிக்கவல்லது ஆகிறது.

அது மட்டுமல்ல.அதே அடிப் படையில் அவஸ: என்ற சொல்லே அரசன் மற்றும் கதிரவனையும் சொல்லும்.

''அவஸ: , பும், (அவ ரக்ஷணாதௌ அவதி இதி அத்த்யவிசமீத்யாதிநா அஸச் ப்ரத்யய:) ராஜா ஸூர்ய: இதி ஸித்தாந்தகௌமுதீ என்று சப்தகல்பத்ருமத்திலே பதிவிட்டுள்ளதைப் பார்க்கலாம்.

தாபத்ரயத்தினாலே அவதிப் படும் முமுக்ஷு, எம்பெருமானைக் கண்டானாகில் வாரிப் பருக விழைவான் அல்லவா? அந்த நிலையிலே ஆழ்வார் காட்கரை அப்பனை அனுபவிக்கப் போந்தாராம். ஆம் அவர் உருகுமாலில்

வாரிக் கொண்டு உன்னை, விழுங்குவன் காணிலென்று *
ஆர்வுற்ற என்னை யொழிய, என்னின் முன்னம்
பாரித்துத் * தான் என்னை, முற்றப் பருகினான் *
காரொக்கும் காட்கரை யப்பன், கடியனே. என்று அருளுவதைப் பாருங்கள்.

இதற்கான அடியேன் ப்ராசார்யனின் ஶ்லோக ரூபமான மொழி பெயர்ப்பான ப்ரதிபிம்பலஹரீ ஶ்லோகம்

த்ருஷ்ட்யா த்ருஷ்டே த்வயி து கபலீ த்வாம் கரோமீ–
த்யுத்கான் மத்த: ப்ரதமமபாஹாயைவ மாமுத்ஸுகஸ்ஸந்
கார்த்ஸ்ந்யேநைவ ஸ்வயமிஹ ஸ மாம் பீதவான் மேகதுல்ய–
ஶ்ரீமான் ஶ்ரீமாருததடபுரீபாந்தவஶ்ஶீக்ரகாரீ

ஆக எம்பெருமான் ஆழ்வாருக்குப் போல நமக்கும் புத்துணர்வளிக்கும் பானமாக அவஸமாகத் திகழ்பவன்.

அந்த அவஸன் அருளால் தான் அவனை மீண்டும் மீண்டும் பருகும் விடாய் நமக்கு வரும்.ஆம்.அவனே அவனைப் பெற வழி. உபாயமும் அவனே உபேயமும் அவனே என்பதல்லவா வேதமதம். அதனைத் தான் ''த்வயாவஸேன ஸமஶீமஹி த்வா'' என்கிறான் வேதத்தாழ்வான். இங்கு அவஸேன த்வயா த்வா ஸமஶீமஹி என உரை நடை அமையும்.

இனி மந்திரத்தின் மூன்றாம் அடி ''ஸ நோ மயோபூ: பிதோ! ஆ விஶஸ்வ'' என்பது. இங்குப் பிதோ! என்பது விளிச் சொல். பிது : என்பது உகாராந்த புல்லிங்க வட சொல்.இதற்கு உண்ணும் சோறு என்று பொருள். ''பிது பு பா–ரக்ஷணே துந் ப்ருஷோ அந்நே நிகண்டு: பாதேவாம் பிபதே: பாயதேர்வா'' என்பது காண்க. உடலையும் உயிரையும் பாதுகாத்திடுவது என்ற அடிப்படையில் இப் பெயர் பா–பாதுகாத்தல் என்ற வினைவேரிலிருந்து கிளர்ந்தசொல் இது.

உண்ணும் சோறு பருகு நீர் எல்லாம் கண்ணன் என இருப்பது ஆழ்வார் நிலை அந்த நிலை தானே நாம் வேண்டும் ஶ்ரேயோ நிலை. அந் நிலையில் நிற்பவர் எம்பெருமானை விளிக்கும் சொல்லும் பெயரை இட்டு ஹே பிதோ என எம்பெருமானை விளித்து அத்தகைய உணவான நீ என்பதை ஸ: என்பதனாலே குறிப்பிடுகிறான்.

மேலே அத்தகைய நீ மயோபூ: – இன்பம் பயப்பவனாய் அதாவது ஸுகத்தினை உண்டாக்கிடுபவனாய் ந:–அடியோங்களுள் அதாவது அடியோங்கள் நெஞ்சங்களில் ஆ விஶஸ்வ– உனது நெஞ்சு நிறையும்படியும் அடியோங்களுடைய நெஞ்சங்கள் நிறையும்படியும்

பேரே யுறைகின்ற பிரான், இன்று வந்து *
பேரேனென்று, என்னெஞ்சு நிறையப் புகுந்தான் *
காரேழ் கடலேழ், மலையே ழுலகுண்டும் *
ஆரா வயிற்றானை, அடங்கப் பிடித்தேனே. என்னும் படி வந்து புகுந்தருள வேண்டும்.

இங்கு நெஞ்சு நிறையப் புகுந்தான் என்கிற இடத்தில் யார் அல்லது எது நிறையப் புகுந்தான்? என்கின்ற கேள்வி எழும்.

திருவாறாயிரப்படி தொடக்கமான அனைத்து பூர்வாசார்ய வ்யாக்யானங்களும் அவன் நிறையப் புகுந்தான் என்ற பொருளே கொள்ளப் பட்டுள்ளது.

அதாவது ஆழ்வார் நெஞ்சில் புகுதலினால் அதுவரை குறைவாளனாகத் தன்னை எண்ணி வந்த அவன் நிறைவு பெற்றதாகக் கருதினான் என்ற சுவை மிகுந்த பொருள் காட்டப் பட்டுள்ளது.

புகுதலின் பலன் அவனுக்கே என்று அவன் திருவுள்ளம் ஆகியது. இதனை வேதத்தாழ்வான் இங்கு மிக அத்புதமான முறையில் காட்டியுள்ளான். புகுதலைச் சொல்லும் விஶதி என்கிற தாது பரஸ்மை பதி. மற்றவருக்குப் பலன் கிட்டும் செயலை ஒருவன் செய்யும் பொழுது அதைக் குறிக்க பரஸ்மை பதி தாது பயன் படுத்தப்பட வேண்டும் என்பது பொதுவான நெறி. சமையற்காரன் மற்றவர்கள் சாப்பிடுவதற்குச் சமைப்பவன். எனவே அவன் சமைப்பதைச் சொல்கையில் ஸூ³த: பசதி என்று பரஸ்மைபதி வடிவத்தைப் பயன் படுத்திட வேண்டும். பரமைகாந்தியான ஸ்வாமி ஒருவர் ஸ்வயம் பாகமாகத் தாமே தளிகை செய்வதைக் குறிக்கையில் ஸ்வாமீ பசதே என்று ஆத்மனே பதியில் சொல்ல வேண்டும்.

இந்தப் பொது நியதியை மீறி உலகத்திலும் இலக்கியங்களும் தாதுக்களை பயன் படுத்தும் வழக்கம் ஏற்பட்டு விட்டது. அதனால் சில தாதுக்கள் பரஸ்மை பதியாகவே பயன் படுத்தப்படும்; சில ஆத்மனே பதியாகவே பயன்படுத்தப்படும்; சில தாதுக்கள் இருவகையிலும் அமையும் என்று பாணினி பகவானே வரையுறுத்தி இலக்கணத்தில் கூறிவிட்டார்.

இதனால் புகுதல் என்ற பொருளில் வரும் விஶ என்கிற தாது பரஸ்மைபதிப் பட்டியலில் இடம் பெற்றது. அதன் படி இங்கு புகவேண்டும் என்பதற்குரிய வேண்டுதலைச் சொல்லை ஆவிஶ என்ற பரஸ்மை பதி வடிவம் தான் வருதல் வேண்டும். ஆனால் வேதத்தாழ்வான் ஆவிஶஸ்வ என்று ஆத்மனே பதி வடிவத்திலே ஓதியுள்ளான். இதனால் புகுதலின் பயன் தனக்கே என்று எம்பெருமான் திருவுள்ளத்தைக் காட்டிடுகின்றான் போலும்.

எனவே அடியேன் ‘‘அவன் நெஞ்சும் நிறைய, நம் நெஞ்சும் நிறைய, அவன் புகுந்திட வேண்டும் என இரு பொருள்களையும் இணைத்துக் காட்டினேன்.

இனி அவன் எப்படிப் புகுந்தருளிட வேண்டும் என்பதை ‘‘ஶம் தோகாய தனுவே ஸ்யோன:’’ என்கின்ற நான்காம் அடியில் காட்டுகிறான்.

தோகாய– கேசவன்தமரில் போல் அடியோங்கள் ஸந்ததிகளையும் (இது முன்னோர்களுக்கும் உபலக்ஷணம்) ஶம்– துயரறு நிலை தந்து தனுவே–அடியோங்கள் ஶரீரத்துக்கும் ஏறாளும் இறையோனில் போல

மேகலையால் குறைவில்லா, மெலிவுற்ற வகலல்குல் *
போகமகள் புகழ்த் தந்தை, விறல் வாணன் புயம் துணித்து
நாக மிசைத் துயில்வான் போல், உலகெல்லாம் நன்கொடுங்க *
யோகணைவான் கவராத உடம்பினால், குறைவிலமே

என்று அடியோங்கள் இகழும் நிலை வராதபடி ஸ்யோன:– இன்பம் பயப்பவனாக! (நெஞ்சுள் புகுந்தருள வேண்டும்)

ஸ்ரீராமாயணமும் திருப்பாவையும்

T.C.A. வெங்கடேசன்

7. கீசுகீசென்றெங்கும்

இந்தப் பாசுரத்தில் இக்கட்டுரைக்கு விஷயமாகிறது "தேசம் உடையாய் திற" என்கிற சொற்றொடர்.

எழுந்திருப்பவர்களைக் கொண்டு மட்டும் எம்பெருமானை அநுபவிப்போம் என்று இராமல், எல்லோரும் நன்மை பெற வேண்டுமென்று கருதி உறங்கிக் கிடக்கிறவரையும் எழுப்பிக் கொண்டு போக எண்ணுகிறார்கள் இப்பாட்டிலே.

இங்கு ஆச்சரியமான ஐதிஹ்யம் ஒன்றைக் காட்டுகிறா் அழகிய மணவாளப் பெருமாள் நாயனார். ஆட்கொண்டவில்லி ஜீயர் என்னும் மஹநீயர் எழுந்தருள அவரை நஞ்ஜீயர் வணங்கி நின்றார். அப்பொழுது அவர் "எம்பெருமான் விஷயத்தில் நமக்கு ருசி உண்மையில் பிறக்கவில்லை" என்றார். அதைக் கேட்ட நஞ்சீயர் "தேவரீரைப் போன்ற ஆசார்யர் உண்டோ? எதற்காக இப்படி அருளிச் செய்தீர்" என்று வினவினார். அதற்கு ஆட்கொண்டவில்லி ஜீயரும் "எம்பெருமான் விஷயத்தில் உண்மையான ருசி என்பது அவன் அடியார்களைக் கண்டால் உகக்கும் போது தான் அமையும்" என்றாராம்.

ஆகையால் பாகவதர்களை எல்லாம் கூட்டிக் கொண்டு அவனை அநுபவிக்கப் புக வேணுமென்று பாரிக்கிறார்கள் ஆயர்சிறுமியர்.

உறங்கிக் கிடக்கும் ஒருத்தியின் வாசலிலே சென்று 'பொழுது விடிந்தது, எழுந்திராய்' என்று சொல்ல, அவளும் விடிந்தமைக்கு அடையாளம் கேட்க, அவற்றைக் கூறுகின்றனர்.

பரத்வாஜப் பறவைகள் சேர்ந்து பேசுகின்ற சப்தமும், ஆய்ச்சியர் அணிந்துள்ள ஆபரணங்கள் அசைந்து செய்கின்ற சப்தமும், அவர்கள் கைகளை அசைத்து மத்தினால் கடைய அதனால் ஏற்பட்ட தயிரின் சப்தமும் இருக்க, "ஆறு மலைக்கு எதிர்ந்தோடும் ஒலி அரவூறு சுலாய் மலை தேய்க்கும் ஒலி கடல் மாறு சுழன்று அழைக்கின்ற ஒலி" போன்ற இவற்றைக் கேட்க முடியாமல் அங்கே என்ன நடக்கின்றது என்கின்றனர்.

திருமாளிகையில் ஏவலர்கள் துதி பேசக் கேட்டு எழாமல், இவை என்ன சப்தம் என்று அவள் கிடக்க, அவளைப் பேய்பெண்ணே என்கின்றனர். பகவத் ஸம்ச்லேஷத்தின் எல்லை நிலமான பாகவத ஸம்ஸ்லேஷத்திற்கு விரைந்து ஓடி வராமல் ஆறியிருத்தல் பேய்த்தன்மையாம் என்பதால் அவளை மதி கெட்டவள் என்கிறார்கள்.

தலைமை உடையவளாய் இருப்பவள் என்பதால் அவளை நாயகப் பெண்பிள்ளாய் என்றும் அழைக்கிறார்கள்.

ஸ்ரீமந்நாரயணனின் அவதாரமான ஸ்ரீக்ருஷ்ணனைப் பற்றி பாடக் கேட்டும் நீ உறங்கிக் கிடப்பாயோ என்கின்றனர்.

இங்கு தேசம் உடையாய் என்றது, அவள் மிக்க ஒளி பொருந்தியவள் என்பதைக் காட்டுகிறது. உன்னைக் காணாமல் இருட்டடித்துக் கிடக்கும் எங்களுக்கு உன்னுடைய

அளக்க முடியாத தேஜஸ்ஸேக் கொண்டு ஒளி பிறப்பிக்கைக்காகவும், உன்னுடைய அழகைக் காண்பதற்காகவும் நீயே வந்து வாசல்கதவைத் திறவாய் என்கிறார்கள். அப்படி இருக்கிற அவளுடைய புகரானது "க்ருஷ்ண விஜயாநுஸந்தான ப்ரீதியாலே" எற்பட்டது என்கிறார் பெரியவாச்சான்பிள்ளை.

7. ஸ்ரீராமாயண காட்சி

மாயன் இராவணனால் கவரப்பட்ட சீதா பிராட்டியைப் பிரிந்த பெருமாள், இலக்குவனோடு அவளைத் தேடி வந்து ரிஷ்யமுக பர்வதத்திலே மறைந்து கிடந்த ஸுக்ரீவ மஹாராஜருடன் நட்பு கொண்டார். அவனுக்கு விரோதியான வாலியை அழித்து அவனுக்குச் சாம்ராஜ்யம் கிடைக்கும்படியும் செய்தார்.

அதற்குப் பிறகு மழைக் காலம் ஏற்பட்டபடியால் நான்கு மாதங்கள் பிராட்டியைத் தேட முடியாமல் துன்பத்தில் இருந்தார் பெருமாள்:

சத்வாரோ வார்ஷிகா மாஸா கதா வர்ஷ சத உபமா:

மம சோக அபிதப்தஸ்ய ததா ஸீதாம் அபச்யத:

ஆனால், அவருடன் ஸக்யம் செய்து கொண்ட ஸுக்ரீவன், தன் கார்யம் முடிந்தது என்று ஆறியிருக்கிறான் என்று அவனுடைய துர்மதியை வெறுத்துப் பேசுகிறார்:

ஸ காலம் பரிஸங்க்யாய ஸீதாயா: பரிமார்கணே

க்ருதார்த: ஸமயம் க்ருத்வா துர்மதி: ந அவபுத்யதே

கோபம் கொண்ட பெருமாள், இலக்குமணனை அவனிடம் அனுப்பி விஷயத்தை அறிந்து வருமாறு கூறும் போது, "வாலி சென்ற மார்க்கம் இன்னும் மூடப்படவில்லை, அதிலே செல்ல வேண்டாம்" என்று சொல்லும்படி நியமிக்கிறார்:

ந ஸ ஸங்குசித: பந்தா யேந வாலீ ஹதோ கத:

ஸமயே திஷ்ட ஸுக்ரீவ மா வாலி பதம் அந்வகா:

கிஷ்கிந்தை தலைநகரை அடைந்த இளவலின் நாகம் போன்ற சீற்றத்தைக் கண்ட வானரங்கள் நடுங்குகின்றன.

ஆதிசேஷனான இளைய பெருமாளின் கோபத்தைக் கண்டு அங்கதனும் கலங்கினான்:

தம் தீப்தம் இவ காலாக்நிம் நாகேந்த்ரம் இவ கோபிதம்

ஸமாஸாத்ய அங்கத: த்ராஸாத் விஷாதம் அகமத் பரம்

அவனை ஸுக்ரீவனிடம் செல்லும்படி அனுப்புகிறார் இளவல். ஸுக்ரீவனோ மது பானத்தினாலும், மனைவியரின் போகத்தினாலும் உறங்கிக் கிடந்தான்:

ஸ நித்ரா மத ஸம்வீதோ வாநரோ ந விபுத்தவாந்

பபூவ மத மத்த: ச மதநேந ச மோஹித:

அங்கதனும், அமைச்சர்களும் ஸுக்ரீவனுக்கு இளைய பெருமாள் வந்துள்ளதை உரைக்கின்றனர். திருவடியும் அவன் குற்றத்தைச் சொல்லி, புத்ர மித்ராதிகளுடன் இளவலிடம் சரண் புகும்படி கூறுகிறார்:

தஸ்ய மூர்த்நா ப்ரணம்ய த்வம் ஸ புத்ர: ஸ ஸுஹ்ருத் ஜந:

அரண்மணையை அடைந்த இளைய பெருமாள் அங்கு நடப்பவற்றைக் கண்டு மிக்க கோபம் கொண்டவராய்த் தன் வில்லின் நாணைப் பிடித்திழுத்து பெரும் ஒலியை எழுப்பினார்:

ரோஷ வேக ப்ரகுபித: ச்ருத்வா ச ஆபரண ஸ்வநம்

சகார ஜ்யா ஸ்வநம் வீரோ திச: சப்தேந பூரயந்

அவரைச் சாந்தமுறச் செய்ய தாரையை அனுப்புகிறான் ஸுக்ரீவன்.

பிறகு ஸுக்ரீவனைச் சந்தித்துப் பேசுகிற இளவல், பெருமாளைப் பற்றிப் பலவாறாகச் சொல்லி, அவர் சொன்னபடியே 'வாலி சென்ற வழி இன்னும் மூடப்படவில்லை' என்று உரைக்கிறார்:

ந ச ஸங்குசித: பந்தா யேந வாலீ ஹதோ கத:

ஸமயே திஷ்ட ஸுக்ரீவ மா வாலி பதம் அந்வகா:

அவரை மீண்டும் சமாதானப்படுத்தி, வாநர ஸேனைகள் ஆயத்தமாய் உள்ளன என்றும், அன்றே பெருமாள் முன் அவைகள் வரும் என்றும் கூறுகிறாள் தாரை. ஸுக்ரீவனும் தன் குற்றத்தை விண்ணப்பிக்க, சீற்றம் தணிந்த இலக்குவன், ஸுக்ரீவனை உடனே பெருமாளிடம் தன்னுடன் வரும்படி கூறுகிறார்:

கிம் து சீக்ரம் இதோ வீர நிஷ்க்ராம த்வம் மயா ஸஹ

இவ்வாறு வானரங்களுக்கு நாயகனாயும், மிக்க தேஜஸ்ஸுடைய ஸூர்யனுடைய குமாரன் ஆதலால் ஒளி பொருந்தியவனாயும் இருக்கிற ஸுக்ரீவன் மதி கெட்டு உறங்கிக் கிடந்தான் என்றும், வாநரங்கள் கலந்து பேசின பேச்சரவத்தையும், அமைச்சர்களுடைய போதனா சப்தத்தையும், இளைய பெருமாள் நாணினால் செய்த ஓசையையும் கேட்டான் என்றும் காட்டப்படுகிறது. பெருமாளுடைய திருக்குணங்களை அவன் கேட்கும்படி செய்து, ராம லக்ஷ்மணர்களுடனான பகவத் பாகவத ஸம்ச்லேஷத்தைத் துறந்து உறங்கிக் கிடக்காமல் பெருமாளிடம் உடனே வரும்படி அரண்மனைக் கதவைத் திறந்து வாராய் என்கிறார் இளைய பெருமாள் என்றும் காண்கிறோம்.

பிள்ளைலோகாசார்யரின் ரஹஸ்யத்ரய விளக்க நூல்கள்

டாக்டர் கே.எஸ். உஷா

2.3. திவயபிரபந்த உரைகளில் ரஹஸ்யத்ரயம் :

நாலாயிர திவயப்பிரபந்தத்தைத் தொகுத்து முதலாயிரம், இரண்டாம் ஆயிரம், இயற்பா, திருவாய்மொழி என்று பெயரிட்டு அவ்வவவாயிரத்துக்குரிய பிரபந்தங்களை வரிசைப்படுத்தி அமைத்த பெருமை நாதமுனிகளையே சாரும். இவ்வாறு அவர் வரிசைப்படுத்தியதற்குக் காரணம் முதல் ஆயிரத்திலுள்ள 'கண்ணிநுண் சிறுத்தாம்பு!' நீங்கலான பிரபந்தங்கள் ப்ரணவப்பொருளை விளக்குவன. 'கண்ணிநண் சிறுத்தாம்பு' – நம: என்ற சொற்பொருள் உடையது. இரண்டாம் ஆயிரம் 'நாராயணாய' என்பதன் பொருளையும், இயற்பா சரமச்லோகப் பொருளையும், திருவாய்மொழி த்வயமந்திரப் பொருளையும் விளக்கும் என்பதாலேயே என்று நமது பூர்வாசார்யர்கள் மயர்வறமதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார்களின் திவ்யஸூக்திகள் அனைத்தையும் ரஹஸ்யத்ரயத்தின் விவரணமாகவே நிரூபித்துக் காட்டியுள்ளனர்.

எம்பெருமான் திருமந்திரத்தை வெளியிட்டமையை 'நரநாரணனாய் உலகத்து அறநூல் சிங்காமை விரித்தான்!'' (பெரிய திருமொழி 10.6.1) என்றும், த்வயார்த்தத்தை திருவாய்மொழியிலும், கண்ணன் அருளிய சரமச்லோகார்த்தத்தை 'மெய்ம்மைப் பெருவார்த்தை' (நாச்சியார் திருமொழி 11.10) என்றும் ஆழ்வார்கள் விசேஷித்துள்ளனர்.

திவ்யபிரபந்த உரைகளில் ரஹஸ்யத்ரயங்கள்:

''பெருகு மதவேழம் மாப்பிடிக்கு முன்னின்று
இருகணிளமூங்கில் வாங்கி – அருகிருந்த
தேன்கலந்து நீட்டும் திருவேங்கடம் கண்டீர்
வான்கலந்த வண்ணன் வரை. (இரண்டாம் திருவந்தாதி 75)

பெருகு மதவேழம் இருகணிளமூங்கில் வாங்கி – மதநீர் பெருகப் பெற்ற யானையானது தனது பேடைக்குத் தேன்களைக் கலந்து இனிய உணவு கொடுப்பதை விவரிக்கிறது. ''இருகணிள மூங்கில் வாங்கி'' – த்வயத்தின் இரண்டு கண்டம், ''அருகிருந்த தேன் கலந்து நீட்டும்'' – அந்த த்வயத்தின் இருபக்கத்திலும் திருமந்திரம், சரமச்லோகம் என்கிற தேன்களைக் கலந்து என்று பொருள். அதாவது, எம்பெருமானார் த்வயத்தின் பொருளைத், திருமந்திரம், சரமச்லோகம் இவற்றின் பொருளுடன் சேர்த்து உபன்யஸித்ததைக் கேட்டபின், 'பண்தருமாறன் பசுந்தமிழ் ஆனந்தம் பாய் மதமாய் விண்டிட எங்கள் இராமானுச முனி வேழம்' மூலம் மேற்சொன்ன பூதத்தாழ்வார் பாசுரத்தின் உள்ளுறை பொருள் அறியப் பெற்றதாக அனந்தாழ்வான் கூறுவர்.

திருப்பாவையில் 'தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போதந்தார்'. தங்கள் இல் – திருமந்திரம் – அநந்யார்ஹ சேஷத்வ, அநந்ய சரணத்வ அநந்ய போக்யத்வங்களாகிற ஜீவ ஸ்வரூபம் சொல்லப்படுவதால், அது சேதனர்களுக்கான கோயில். திரு இல் – த்வயம் – பிராட்டி புருஷகாரமானாலல்லது எம்பெருமான் காரியம் செய்யான் என்னும்படியான பிராட்டியின் ஏற்றம் சொல்லுவதால் அது பிராட்டிக்கான கோயில். கோ இல் – சரமச்லோகம் – சரமச்லோகத்தில் 'அஹம் த்வா ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி' என்று எம்பெருமான் காரியம் செய்து

தலைக்கட்டுவதாகச் சொல்லுவதால் அது கோவான ஈச்வரன் கோயில்.

இதேபோல், 'கண்ணன் கழலிணை' திருவாய்மொழியில் (10.5) ரஹஸ்யத்ரய அர்த்தங்கள் வெளிப்படுவதை வியாக்கியானங்களில் காணலாம்.

'எண்பெருக்கந்நலத்து ஒண்பொருள் ஈறில் வண்புகழ் நாராணன்' (திருவாய்மொழி 1.2.10) என்று பஜனத்திற்குப் பற்றுக்கோடாகச் சொன்ன திருமந்திரத்தை 'எண்ணும் திருநாமம் திண்ணம் நாரணமே' என்றும், 'மாதவன் என்று என்று ஓத வல்லீரேல்! ' என்று இரட்டித்துச் சொல்லி பிராட்டியின் தொடர்பை இரண்டு தடவை அநுஸந்திக்க நியமிப்பதால் த்வயத்தையும், 'வினை வல்லிருளென்னும் முனைகள் வெருவிப்போம்' என்று சரமச்லோகத்தின் திரண்ட பொருளான 'ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி' என்பதையும் காட்டுகிறார்.

இயல் - 3 பிள்ளைலோகாசார்யரின் நூல்கள்

3.1. சாஸ்திரம் கூறும் அர்த்தபஞ்சகம் :

ஸர்வேச்வரனே ஸர்வஸ்வாமி. ஜீவாத்மாக்களான நாம் அவனுடைய சொத்து. அவனை அடைந்து கைங்கர்யம் பண்ணுவதே புருஷார்த்தம். அவனை அடைய அப்பெருமானே உபாயம். இதற்குத் தடையாய் நிற்கும் விரோதி வினைப் பயனான அறிவுக் குறை. இவற்றை அவனே போக்கித்தரவேணும்.

இப்படி இறைநிலை, உயிர்நிலை, தக்கநெறி, தடையான ஊழ்வினை, வாழ்வு என்ற ஐம்பொருள்களையே அர்த்தபஞ்சகம் என்று எல்லா சாஸ்திரங்களும் நமக்குத் தெரிவிக்கின்றன. இவ்வர்த்தபஞ்சகம் இதர சாஸ்திரங்கள் பலவற்றிலிருந்தும் அறியக்கூடுமானாலும் திருமந்திரம், த்வயம், சரமச்லோகம் என்கிற ரஹஸ்யத்ரயத்திலிருந்து அறிவதே மிகச் சிறந்ததென்று நம் பூர்வாசார்யர்கள் திருவுள்ளம் பற்றினார்கள். எம்பெருமானாருக்கு முன்பிருந்த ஆசிரியர்கள் இந்த ரஹஸ்யத்ரயத்தின் சீரிய பொருள்களை ஏகாந்தமாக ஓராண்வழியாகவே உபதேசித்துப் போந்தார்கள். எம்பெருமானார், ஸம்ஸாரிகள் பக்கல் கருணை கொண்டு, தாமே உபதேசித்தும் தம்முடைய சிஷ்யர்களைக் கொண்டு உபதேசிப்பித்தும் போந்தார். பிற்காலத்தில், இந்த ரஹஸ்யங்களை நூல் வடிவமாக மிக விரிவாக அஷ்டாதசரஹஸ்யம் என்று புகழ்பெற்ற பதினெட்டு நூல்களில் அருளியவர் பிள்ளைலோகாசார்யர் ஆவார். அவை மூன்று பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளன :–

3.2 பிள்ளைலோகாசார்யரின் நூல்கள்

ரஹஸ்யத்ரய விவரண நூல்கள்: 1.யாத்ருச்சிகப்படி, 2.ச்ரிய:பதிப்படி, 3.பரந்தபடி, 4.முமுக்ஷுப்படி, 5. தனிப்ரணவம், 6.தனித்வயம், 7.தனி சரமம், 8. ஸாரஸங்கரஹம்.

தத்வத்ரய விளக்க நூல்கள்: 9.தத்வத்ரயம், 10.அர்த்தபஞ்சகம், 11.ப்ரமேயசேகரம், 12.அர்ச்சிராதி, 13.த்த்வசேகரம்.

ஸம்ப்ரதாய விவரண நூல்கள்: 14.ஸ்ரீவசநபூ,ணம், 15.ப்ரபந்நபரித்ராணம், 16.ஸம்ஸார ஸம்ராஜ்யம், 17.நவரத்னமாலை, 18.நவவிதஸம்பந்தம்.

இவை தவிர, மணவாளமாமுனிகள் தமது ரஹஸ்ய வியாக்கியானங்களில் தத்வத்ரய விஷயமாக மற்றும் இரண்டு சுருக்கமான நூல்களும், மேலும் தனிச்லோகமும், கத்ய வியாக்கியானமும் பிள்ளைலோகாசார்யர் அருளியிருப்பதாக மேற்கோள் காட்டுகிறார். எனினும், அவை இப்போது கிடைப்பது இல்லை. இவைதவிர மேலும் சில நூல்களையும் பிள்ளைலோகாசார்யர் அருளிச்செய்துள்ளார் என்று கருத இடமேற்படுகிறது. அவைகளுள்

வடமொழியில் அமைந்த "தத்வ விவேகம் என்ற நூல் ஓலைச்சுவடிகளிலிருந்து முதுமுனைவர் ம.அ. வேங்கடகிருஷ்ணன் ஸ்வாமியால் தமிழ் மொழி பெயர்ப்புடன் வெளியிடப்பட்டுள்ளது.

2.3.1. ரஹஸ்யத்ரய விவரண நூல்கள்

1. யாத்ருச்சிகப்படி : திருமந்திரம், சரமச்லோகம், த்வயம், என்னும் மூன்று பாகங்களில் நாம் அறிய வேண்டிய (பஞ்சஸம்ஸ்காரத்தின் போது ஆசார்ய உபதேசமாகப் பெறும்) மூன்று ரஹஸ்யங்களின் விவரணமாக அமைந்துள்ளது. மூன்று மந்திரங்களின் பொருள்களைச் சுருக்கமாகக் கூறுவது. உரைநடையில் அமைந்துள்ளது. 'படி' என்பது வியாக்கியானம். ஒரே நூலுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட வியாக்கியானங்கள் தோன்றியபோது 'படி' என்ற சொல் குறியிடப்படுகிறது. 'படி' என்பது 'இது ஒரு வகை வியாக்கியானம்' எனப் பொருள் கொள்ளலாம். யாத்ருச்சிகம் என்று தொடங்குவதால் குறிப்பால் பெயர் பெற்ற நூல்.

2. சரிய:பதிப்படி : திருமந்திரம், சரமச்லோகம், த்வயம் என்னும் மூன்று மந்திரங்களின் பொருள்களையே மிகச் சுருக்கமும் மிக விரிவும் இன்றி இடைப்பட்ட நிலையில் கூறுவது. ச்ரிய:பதி என்று தொடங்கும் இதில் வடசொற்கள் மிக அதிகமாக ஆளப்பட்டுள்ளன. இதுவும் உரைநடையில் அமைந்துள்ளது.

3. பரந்தபடி : திருமந்திரம், சரமச்லோகம், த்வயம் என்னும் மூன்று மந்திரங்களின் பொருள்களையே மிகமிக விரிவாகப் பேசுவது. உரைநடையில் அமைந்துள்ளது.

4. முமுக்ஷுப்படி : திருமந்திரம், த்வயம், சரமச்லோகம் என்னும் மந்திரங்களின் பொருள்களையே சூத்திரவடிவில், மிகச் சுருக்கமும் மிக விரிவும் அதிக வடமொழிக்கலப்பும் இன்றிக் கூறுவது. 'முமுக்ஷுவுக்கறிய வேண்டிய ரஹஸ்யம் மூன்று' என்று இந்த நூல் தொடங்குவதால் முமுக்ஷுப்படி என்று அழைக்கப்படுவதாயிற்று. மிக அரியதொரு நூல். இதற்கு 'திருமந்த்ரார்த்தம்' என்ற தெளிந்த வியாக்கியானம் விசதவாக்சிகாமணியான மணவாள மாமுனிகளால் அருளிச் செய்யப்பட்டுள்ளது. நாம் அனைவரும் நிச்சலும் அநுஸந்திக்க வேண்டிய காலக்ஷேபக்ரந்தங்கள் முமுக்ஷுப்படியும், மாமுனிகளது திருமந்த்ரார்த்தமும் ஆகும். 278 சூத்திரங்கள், மூன்று ப்ரகரணங்கள் (பகுதிகள்) கொண்டது. சூத்திரங்களாக இருப்பதால் மனதில் நிற்கும். கட்டுரை வடிவில் உள்ளது மனதில் தங்குவதி அரிது.

5. தனிப்ரணவம் : பெரிய திருமந்திரமான திருவெட்டெழுத்தின் முதல் பதமான ப்ரணவத்தின் பொருளை உரைநடையில் மிகவும் விவரித்து உரைப்பது.

6. தனித்வயம்: மந்திர ரத்தினமான த்வயத்தின் பொருளை விவரித்து உரைப்பது.

7. தனிசரமம்: சரமச்லோகத்தின் பொருளை விவரித்து உரைப்பது.

8. ஸாரஸங்க்ரஹம் : அனைத்து வேத உபப்ரம்ஹணங்களின் ஸாரம் த்வய மந்திரம். இந்த த்வய மந்திரத்தின் பொருளைச் சுருக்கிக் கூறுகின்ற காரணத்தினால் இந்நாலுக்கு இப்பெயர் அமைந்தது. த்வயத்தில் பத்துப் பதங்கள் உள்ளன; இந்தப் பத்துப் பதங்களின் பொருள்களையும், தமிழ் மறையான திருவாய்மொழியில் உள்ள பத்து பத்துக்களுள் ஒவ்வொரு பத்திற்கும் ஒவ்வொரு பொருளாக முறையே சேர்த்து அமைத்துக் கூறுவது. இவையாவன : 1. எம்பெருமான் திருமகள்கேள்வன்; 2. அவன் நாராயணன்; 3. நாராயணனுடைய எல்லா உலகங்களுக்கும் புகலிடமான இரண்டு திருவடித் தாமரைகள்; 4. அத் திருவடிகளே உபாயம்; 5. அவற்றைப் பெற நாம் பண்ண வேண்டிய ப்ரார்த்தனை; 6. திருமகளுக்கும் திருமகளார் தனிக்கேள்வனான எம்பெருமானுக்கும் உள்ள நித்தியமான உறவு; 7.ஸர்வேச்வரனுடைய அளவற்ற இனிமை; 8.

அவன் ஸர்வ ஸ்வாமி; **9.** 'மீளா அடிமை செய்யப் புகுந்தேன்' என்னும் நித்ய கைங்கர்யம்; **10.** 'அவாவற்று வீடு பெற்ற' என்கிறபடி துயர்கள் அறக்களையப்பட்டு வீடு சேருகை. இவற்றை விரிவாகக் கூறும் த்வயமும் திருவாய்மொழியும் நித்யம் போதுபோக்குகைக்கு உறுப்பாக அமைய வேண்டும் என்று உரைநடையில் விளக்குவது.

இவற்றுள் யாத்ருச்சிகப்படி, சரியப்பதிப்படி, முமுக்ஷுப்படி இம்மூன்றும் முதற்குறிப்பால் பெயர் பெற்றவை. பரந்தபடி தன்மையால் பெயர் பெற்றது.

3.3.2. தத்வத்ரய விவரண நூல்கள்

1. தத்வத்ரயம்: சித்து அறிவிற்கு இருப்பிடமென்றும், அசித்து அறிவில்லாதது விடவேண்டியதொன்று என்றும், ஈச்வரன் பரமசேதனன் (இவற்றைத் தனக்கு ப்ரகாரமாகக் கொண்டு நடத்தும் ஸர்வேச்வரன்) பற்றப்படவேண்டிய விஷயமென்றும் மூன்று தத்துவங்களைப் பற்றியும் விரித்துக் கூறுவது. 'குட்டி ஸ்ரீபாஷ்யம்' என்று பெரியோர்கள் இந்நூலை அழைப்பதுண்டு. சூத்திர வடிவில் அமைந்தது. (**202** சூத்திரங்கள் மூன்று பகுதிகள்). இதற்கு மணவாள மாமுனிகளுடைய வியாக்கியானம் அமைந்திருக்கின்றது.

2. அர்த்த பஞ்சகம்: மோக்ஷத்தை விரும்பும் முமுக்ஷுவானவன் அறிய வேண்டிய ஐந்து பொருள்களின் தன்மையைப் பற்றி விரித்துக் கூறுவதால் இப்பெயர் பெற்றது. ஐந்து பொருள்களின் தன்மைகளாவன – தன்னுடைய தன்மை, இறைவனுடைய தன்மை, தான் பெறும் பயனை அடைவிக்கும் வழியின் தன்மை, பயனை அடைய ஒட்டாமல் தடுக்கும் தடையின் தன்மை, தான் பெறும் பேற்றின் தன்மை என்பனவாம். இவற்றை அலகலகாகப் பிரித்து விளக்குவது இந்நூல். (ஐந்து சூத்திரங்கள் – அதன் விரிவுடன் அடங்கியது). இதற்குப் பிள்ளைலோகம் சீயர் விரிவான உரை எழுதியுள்ளார்.

3. ப்ரமேயசேகரம் : எம்பெருமானுடைய திருவருளைப் பெற்ற ஓர் உயிர் அடையத்தக்க பயன், பரமபதத்தையடைந்து இறைவனுடைய திருவடிகளில் செய்யும் கைங்கர்யமே என்பதனை முறைப்படி விளக்கிக் கூறுவது. ஈச்வரன் நம் திறத்தில் படிப்படியாகச் செய்யும் நன்மைகளைப் பற்றிப் பேசுகிறது. ப்ரமேயமாகிற பெருமான் ப்ரமாணத்தால் அறியப்படுபவன். இங்கு ப்ரமாணம் என்பது உண்மை அறிவினைப் பிறப்பிக்கும் வேத நூல்களைக் குறிக்கின்றது.

4. அர்ச்சிராதி : ஸம்ஸாரத்தின் அடிக்கொதிப்பை உணர்ந்து இகிலிருந்து விடுபட்டு எம்பெருமானை அடையத் துடிக்கும் ப்ரபந்ந அதிகாரியை சரீராவஸானத்தில் (உலக வாழ்க்கையின் முடிவில்) அர்ச்சிராதி மார்க்கத்தில் நடத்திப் பரமபதம் கொண்டு செல்லும் படியையும் அங்கு பரமபதநாதனைக் கிட்டி அனுபவிக்கும் படியையும் விவரிப்பது. இது 'அர்ச்சிஸ்' முதலான தேவர் பலர் ஜீவனை எதிர்கொண்டு அழைத்துப் போகும் வழியான முத்தி மார்க்கத்தைப் பற்றி விரித்துக் கூறுவது. இவன் செல்லும் மார்க்கத்தின் அழகையும், அதில் முக்த ஜீவன் பெறும் ஸத்காரங்களையும், விரஜாநதியில் நீராடி அமாநவனால் தொடப்பட்டு அனைத்து குறைகளும் நீங்கப்பெற்று நலமந்தமில்லதோர் நாடு புகுவதையும், அந்நாட்டின் அழகையும் அதில் பரமபதநாதன் திருவநந்தாழ்வானாகிற திவ்ய ஆஸனத்தில் (படுக்கையும் இதுவே) இருந்து இவனை வரவேற்று மகிழ்வதையும் இவன் பெரும் பேற்றையும் விரிவாக அருளிச் செய்வது. இதில் சொல்லப்பட்டவை யாவையும் ச்ருதியில் கண்டவைகளே. (உரைநடைப்பகுதி – நான்கு ப்ரகரணங்கள்). ப்ரமேயசேகரத்தில் சுருங்கக் கூறியதை இந்நூலில் மிக விரித்துப் பேசுகிறார்.

5. தத்வசேகரம் : திருமகள் கேள்வனே பரம்பொருள் என்பதனை, வேத, வேதாந்த, இதிஹாஸ புராணங்கள் முதலிய பல நூல்களிலிருந்து பிரமாணங்கள் காட்டி உறுதிப்படுத்துவது. தத்துவம் – திருமால். சேகரம் – ஓர் அணி விசேடம். இதில் உயிர் நிலை முதலிய ஏனைய பொருள்களின் தன்மைகள் கூறப்பட்டிருப்பினும் எம்பெருமானின் நிலைபற்றிக் கூறுதலே மிகுதியாதலின், இப்பெயர் பெற்றது. இவ்விஷயங்களில் சங்கரர் முதலான ப்ரதிபக்ஷிகளின் மதத்தைச் சொல்லிக் கண்டித்துத் தன் மதத்தை நிலைநிறுத்துவதான ஸ்ரீபாஷ்யம் போல அமைந்துள்ள விரிவான உரைநடை நூல்.

3.3.3. ஸம்ப்ரதாய ஸாரார்த்த விவரண நூல்கள்

1. ஸ்ரீவசந பூஷணம் : இவ்வுலக மக்களுடைய இழவு பொறுக்க மாட்டாமல் தன் பரம க்ருபையாலே, அவர்கள் பேறு பெறும் பொருட்டுப் பல பிரபந்தங்களை அருளிச்செய்தவர் பிள்ளைலோகாசார்யர். ஆசார்யர்களுடைய பரம்பரையில் சொல்லப்பட்டு வந்த அர்த்தங்களுள், அவர்கள் அர்த்தங்களின் பெருமை பற்றி மறைப்பொருளாக உபதேசித்துப் போந்தவை பல. அவற்றின் அருமை பெருமைகளை நோக்கித் தாமும் இதற்கு முன்பு வெளிப்படுத்தாமல் அடக்கிக்கொண்டு போந்தவையுமான அர்த்த விசேடங்கள் எல்லாவற்றையும், பின்புள்ளாரும் இழக்கவொண்ணாது என்று லோகாசார்யர் கருதினார். தம்முடைய பரம க்ருபைக்கும் மேலாக, காஞ்சீ தேவப்பெருமாளும் கனவிலே வந்து கூறியருளுகையாலே, 'ஸ்ரீவசனபூஷணம்' என்கிற இப் பிரபந்தமூலமாக அவ்வர்த்த விசேடங்களை எல்லாம் வெளியிட்டருளுகிறார். 'ஆர்வசனபூஷணத்தின் ஆழ்பொருளெல்லாம் அறிவார்' என்கிறபடி பல சீரிய ஸம்ப்ரதாய அர்த்தங்களைக் கூறுவது இந்நூல். பூர்வாசார்யர்களின் வசனங்களையே பெரும்பாலும் கொண்டு அருளிச் செய்த நூல் ஆகும். 'முன்னங்குரவோர் மொழிந்த வசனங்கள் தம்மை மிகக்கொண்டு கற்றோர்தம்முயிர்க்கு மின்னணியாச் சேரச்சமைத்தவரே சீர்வசனபூடணமென் பேர் இக்கலைக்கிட்டார் பின்' (உபதேசரத்தினமாரல 54) என்கிறபடி ஆசார்ய ஸ்ரீஸூக்திகள் நிறைந்த பூஷணம் இது. இந்த நூல் ஆறு ப்ரகரணங்களாகவும் / ஒன்பது ப்ரகரணங்களாகவும் பிரித்துக் காட்டப்பட்டுள்ளது.

ஆறு ப்ரகாணங்களின் விவரம் : 1. பிராட்டியின் புருஷகாரவைபவமும், அப்புருஷகார முகமாகப் பற்றப்படும் உபாய (சரண்ய) வைபவமும்; 2. சரணமாகப் பற்றப்படும் எம்பெருமானே பேற்றுக்கு உபாயம் என்னுதல்; 3. எம்பெருமானைச் சரணம் பற்றிய ப்ரபந்நன் இருக்கவேண்டிய படிகள் (அதிகாரி நிஷ்டாக்ரமம்); 4. அறியாதன அறிவிக்கும் ஆசார்யலக்ஷணம், ஸச்சிஷ்யலக்ஷணம், ஆசார்யனை அநறுவர்த்திக்கும் முறை இவற்றைப் பேசுமது; 5. பகவான் நம்மை அங்க்கரிக்கும் நிர்ஹேதுகமான (காரணமேதும் காட்ட முடியாத) க்ருபையின் பெருமை பேசுமது; 6. ஆசார்ய அபிமானமே உத்தாரகம் (பேற்றை அடைவிப்பது) என்ற சரமபர்வநிஷ்டையைப் பேசுமது. (466 சூத்திரங்கள் – ஆறு ப்ரகரணங்கள் கொண்ட நூல் இது)

இந்த ஸ்ரீவசனபூஷண திவ்ய சாஸ்திரத்திற்கு மணவாள மாமுனிகள் தேனும் பாலும் கன்னலும் அமுதுமான வியாக்யானம் அருளியுள்ளார். விஷயத்தின் பெருமை பற்றி இவவியாக்கியானத்தை விளக்கி திருமழிசை அண்ணாவப்பங்கார் ஸ்வாமியும், ஸ்ரீபெரும்பூதூர் ஒன்றான எம்பார் ஜீயர் ஸ்வாமியும், அரும்பத விளக்கநூல்கள் அருளிச் செய்துள்ளனர். குன்னத்தூர் ஐயன் என்னும் ஆசார்யர் ஸ்ரீசனபூஷண மீமாம்ஸாபாஷ்யம் என்ற அரிய வடமொழி வியாக்கியானம் அருளியுள்ளார்.

2. ப்ரபந்ந பரித்ராணம் : தன்னை அடைந்தவர்களைப் பாதுகாத்தல் திருமகள் கேள்வன் ஒருவனுக்கே இயல்பாய் அமைந்தது. ஏனையோர் காத்தற்கு உரியர் அல்லர் என்பதனைப் பல உதாரணங்கள் காட்டி மக்களுடைய மருட்சியைப் போக்கும் ஓர் உயர்ந்த நூல். முமுக்ஷுவாய், மோக்ஷம் வேண்டி ஸர்வேச்வரனைப் பற்றிய அதிகாரிக்கு அநந்யகதித்வமும் ஆகிஞ்சன்யமும் வேண்டும். அநந்யகதித்வமாவது – எம்பெருமானைத் தவிர்த்து வேறு காப்பவரில்லை என்ற துணிவு. இதர தெய்வங்கள் காப்பவராக மாட்டார்கள். பொருள் ரக்ஷகமாட்டாது. எம்பெருமான் ஒருவனே ரக்ஷகன். ஆகிஞ்சன்யமாவது – கைம்முதல் இல்லாமையைச் சொல்லி ஸர்வேச்வரனையே மோக்ஷத்திற்கு உபாயமாகக் கொள்ளுகை. கர்ம ஜ்ஞான பக்தி என்ற உபாயங்களை ஆத்மாவின் பாரதந்திரியத்திற்குச் சேராதவை என்று விலக்கிவிட்டு எம்பெருமானையே எல்லாமாகப் பற்றி இருக்கை. இப்படிப்பட்ட அதிகாரியை அவனே 'நயாமி' என்றபடி தன் நாடேற நடத்திச் செல்வது ஸித்தம், என்று விளக்கிக் கூறுவது இந்த ரஹஸ்யம். உரைநடையில் அமைந்துள்ளது.

3. ஸம்ஸார ஸாம்ராஜ்யம் : இதற்கு ஸம்ஸாரமாகிற பேரரசைப் பற்றிக் கூறுவது என்பது பொருள். ஜீவன், தான் ராஜா என்றெண்ணி ஸம்ஸாரத்திலிருக்கிறான். அரசனுக்குப் படைவீடு போல்வது இவனுக்கு இந்த உடல். இந்த உடலில் இருந்துகொண்டு அரசு புரியும் ஆன்மாவுக்கு இறைவன் ஸம்ஸார இன்னல்களைக் காட்டிப் பின் அதை வென்று தன்னுடைய திருவருளாலே தனதாக்கிக் கொள்ளுவதை விரித்துக் கூறுகின்றது. ஸம்ஸாரத்தின் (இவ்வுலகில் ஒரு உடலில் அகப்பட்டிருக்கும் இருப்பு) கொடுமையை விவரித்து, அதனடியாலே அஹங்கார மமகாரங்களின் இருப்பிடமாய் ஸர்வேச்வரனை மறந்து திரிபவனை அவன் நிர்ஹேதுகமாக அருள்புரிந்து, படிப்படியாக அறியாமையைப் போக்கி மெய்யறிவை உணர்த்தி இவன் நலனுக்குச் செய்யும் சேமங்களையும் பின்னர் ப்ராப்யத்தைப் பெறுவிக்கையையும் சொல்லுவது. உரைநடையில் அமைந்துள்ளது.

4. நவரத்நமாலை: ஒன்பது வித இரத்தினங்களாலான மாலை போன்று ஒன்பது வகையான பொருள்களைப் பற்றிக் கூறுவது. அதாவது சரணாகதனான தன்னையும், தனக்குப் பகையாய் நிற்கும் உடலையும், உடலினைப்பற்றி நிற்கும் உறவினர்களையும், உண்மை ஜ்ஞாநம் இன்றி வினையியல் பிறப்பிலே அழுந்திக்கிடக்கும் மக்களையும், பிற தெய்வங்களையும், ஸ்ரீவைஷ்ணவர்களையும், ஆசார்யனையும், பிராட்டியையும், இறைவனையும், ஆக ஒன்பதின்மர்களையும் ஒருவன் நினைத்திருக்க வேண்டிய விதத்தைத் தெளிவாகக் கூறுவது. உரைநடையில் அமைந்துள்ளது.

5. நவவித சம்பந்தம் : இறைவனுக்கும் உயிர்களுக்கும் உள்ள பிதா–புத்திர, ரக்ஷக–ரக்ஷ்ய, சேஷி–சேஷ, பர்த்ரு–பார்யா, ஜ்ஞாத்ரு–ஜ்ஞேய, ஸ்வ–ஸ்வாமி , ஆதார–ஆதேய, சரீர–சரீரி, போக்த்ரு–போக்ய என்ற ஒன்பது வகைப்பட்ட சம்பந்தங்களை விளக்கிக் கூறும் நூல். உரைநடையில் அமைந்துள்ளது.

இந்த அஷ்டாதசரஹஸ்யத்தில் கூறப்பட்டிருப்பவை முற்றும் நாலாயிர திவ்ய பிரபந்தங்களின் கருத்துப் பொருளும் வேதாந்தங்களின் நுண்பொருளுமாகும்.

3.4. ரஹஸ்யத்ரய விவரண நூல்கள் - ஏன் ஒரே விஷயத்திற்குப் பல நூல்கள்? :

ரஹஸ்யத்ரய மந்திரங்கள் மூன்றாக மட்டுமே இருப்பினும், அவற்றை விளக்க பிள்ளைலோகாசார்யர் எட்டு நூல்களை அருளிச்செய்யக் காரணங்கள் –

3.4.1. ரஹஸ்யத்ரய அர்த்தத்தின் மேன்மை:

திருமந்திரம், த்வயம், சரமச்லோகம் என்கிற மூன்று மந்திரங்களும் சப்தத்தில் எளிதாயிருப்பினும் பொருள் அறிந்தால் மட்டுமே உய்வு பெற முடியும். இவைகள் மூன்றும் முறையே எட்டு, இருபத்தைந்து, முப்பத்திரண்டு திருவட்சரங்களைப் பெற்று, எளிமையாக இருக்கின்றன. ஆனால், இவற்றுள் அடங்கி இருக்கும் பொருள்கள் மிக நுட்பமானவை. இவற்றைச் சொந்த அறிவினாலும், சாஸ்திரங்களின் உதவியினாலும், ஒருவன் தானே அறிந்து கொள்ளுதற்கு இயலாது. முன்னோர்களுடைய உபதேசப் பரம்பரையாக வந்த பொருட்சிறப்புக்களை, அனைவரும் சுலபமாயும் தெளிவாயும் அறிய, பிள்ளைலோகாசார்யர் தம் மேலான கருணையாலே பல ரஹஸ்யநூல்கள் மூலமாக அருளிச் செய்கிறார். இவற்றுள் ரஹஸ்யத்ரயத்திற்கு எனத் தனித்து எட்டு வேறுபட்ட வியாக்கியானங்களை அவர் அருளியுள்ளமை கொண்டு இந்த ரஹஸ்யங்களின் பெருமையை ஒருவாறு அறியலாம். இவற்றையெல்லாம் முறையே அறிந்தால் இவவியாக்கியானங்களுள் உள்ள வேறுபாடுகளை அறியலாம்.

3.4.2. பல நூல்கள் ஏற்பட்டதன் காரணம்

பிள்ளைலோகாசார்யரிடம் சிலர் தாங்கள் உய்வடையக்கோரி சில அர்த்த விசேஷங்களைக் கேட்டனர். அப்போது ரஹஸ்யத்ரய மந்திரங்களின் விஷயமாக அவர் கூறிய கருத்துக்களே 'யாத்ருச்சிக பகவத் கடாக்ஷத்தாலே' என்று தொடங்கும் 'யாத்ருச்சிகப்படி' என்ற நாலாயிற்று. இது மிகவும் சுருக்கமாக இருந்தபடியால், சற்று விரிவாக இம் மூன்று மந்திரங்களையும் விளக்கும் பொருட்டு 'பரந்தபடி' என்னும் நூலை அருளிச்செய்தார். இந் நூல் மிக விரிவாக அமைந்ததால் 'ச்ரிய:பதிப்படி' என்ற சுருக்கமும் விரிவும் இல்லாத இடைப்பட்டதொரு நூலைத் தொகுத்தார். இதில் இவ்விரண்டு குறைகளும் இல்லாதிருப்பினும், வடமொழி மிகுத்திருக்கையால் பெண்ணுக்கும் பேதைக்கும் பயில்வதற்கு இயலாதிருந்தது. எனவே, இம் மூன்று குறைகளுமற்று இன்னமும் ஒரு நூல் இயற்ற வேண்டுமென்று திருவுள்ளம் பற்றிப் பின்பு முமுக்ஷுப்படி என்னும் நூலை இட்டருளினார்.

தனித்வயம், தனிசரமம், தனிப்ரணவம் என்னும் நூல்கள் ரஹஸ்யத்ரயத்தின் மூன்று மந்திரங்களின் ஆழ்ந்த உட்பொருள்களையும் தனித்தனியே விளக்க வந்தனவாகும். திருவாய்மொழி கூறும் பொருள் த்வயார்த்தமே என்று அதன் மேன்மையை உறுதிப்படுத்தும் நூல் 'ஸாரஸங்க்ரஹம்'. சேதநர்களின் துர்கதி கண்டு எங்ஙனேனும் அவர்களை ஸம்ஸாரக் கடலிலிருந்து கரையேற்ற உறுதி கொண்ட இவவாசிரியர் அவர்களின் நன்மையை எண்ணியே இத்துணை நூல்களையும் அருளிச்செய்து போந்தார்.

3.4.3. ரஹஸ்யத்ரய விளக்க நூல்கள் மணிப்ரவாள நடையில் அமையக் காரணம் :

ஒரு குறிப்பிட்ட இடம் பொருளை விளக்க ப்ரத்யேக பாஷைகள் பழக்கத்திலுள்ளது. லத்தீன், கிரீக் போன்றவை சட்டப் புத்தகங்களில் மாறுவதில்லை. அதுபோல், ரஹஸ்யத்ரயத்திலும் சில அர்த்தங்களைக் குறிக்க, வழக்கத்திலுள்ள மொழியே பொருத்தமாயிருக்கும். மேலும், மேற்கோள்கள் அனைத்தும் பெரும்பாலும் வடமொழியிலுள்ளன. வடமொழி தமிழுடன் மாத்திரமே இணையும் சிறப்புத் தன்மைப் பெற்றது. அதனால், வடமொழியும் தமிழும் கலந்த மணிப்ரவாள நடையிலேயே மூலமும், உரையும் அமைந்துள்ளன.

(தொடரும்)

அருளிச்செயல் அமுதம் – 4

நாய்ச்சியார் திருமொழி

ஸ்ரீ உ.வே. ரகுராமன் (எ) பாலாஜி, ஆசிரியர் 'ஸ்ரீசைலேச தயாபாத்ரம்'

எட்டாம் திருமொழி – விண்ணீலமேலாப்பு

பாடவல்ல நாச்சியாரின் ப்ரச்நங்களுக்கும் பாஞ்சஜந்யாழ்வான் பதிலளிக்காமற் போயினன். கார்மேகவண்ணன் வருவதாகக் கூறிச் சென்ற கார்காலமும் வந்தது. மழைக்காலம் வந்தவாறே, மேகங்கள் முழங்கின; ஆனால், எம்பெருமான் வரவில்லை. அவன் வடிவுக்குப் போலியான மேகங்கள் தோன்றினவாறே, 'முகில்வண்ணனும் வந்தானோ' என்று ப்ரமித்தாள் ஆண்டாள். அவனைக் காணாமையாலே கலங்கினாள். மேகமுழக்கத்தைக் கேட்டு, அம்மேகங்களிடம் – 'எம்பெருமான் வாழும் திருவேங்கடமலையில் வஸிக்கையாலே, உங்களுக்கும் அவனுக்கும் ஒரே ஊரில் வஸிப்பதாகிற தொடர்புண்டு; ஆதலால் என்னுடைய நிலையை, நீங்களே அவனிடம் தூது சென்று அறிவியுங்கோள்' என்கிறாள் இத்திருமொழியில்.

"குணந்திகழ் கொண்டல் போல்வாரை மேகமென்னும்" (ஆ.ஹ்ரு.), "தேசிகாஸ் தத்ர தூதா:" (தாத்பர்ய ரத்நாவளி) என்று ப்ரமாணங்கள் கூறுகையாலே, தூதுவிடப்படும் மேகங்கள் என்பது புருஷகார பூதர்களான ஆசார்யர்களையே குறிக்கும் என்று நாம் உணரவேண்டும்.

ஒன்பதாம் திருமொழி – சிந்துரச்செம்பொடி

சென்ற திருமொழியில், சூடிக்கொடுத்த நாய்ச்சியார் "ஒருநாள் தங்குமேல் என்னாவி தங்கும்" (8–7) (ஒருநாளாகிலும் அவன் வந்து கூடுவனானால், என் உயிர் தங்கும்) என்றார். அவன் வரக்காணாமையாலே, – ஸீதாப்பிராட்டிக்கு "ப்ராணாநாமபி ஸந்தேஹோ மம ஸ்யாத்" (ரா.ஸ–ந். 39–22) (நான் உயிர் வாழ்வது ஸந்தேஹமாகும்.) என்ற நிலை ஏற்பட்டாற் போன்ற நிலை, ஆண்டாளுக்கும் உண்டானது. வேங்கடக்கோனிடம் தூதுசெல்லும்படி நியமிக்கப்பெற்ற மேகங்கள், இருந்த இடத்திலேயே நின்று மழைபொழிந்தன. அதனால் மழைக்காலத்திலே தோன்றக்கூடிய புஷ்பங்கள் அலரத் தொடங்கின. அவை எம்பெருமானுடைய திருமேனி அவயவங்களின் அழகை நினைவுபடுத்தி, ஆண்டாளை நலியத் தொடங்கின.

நாய்ச்சியார் இத்திருமொழியில் மாலிருஞ்சோலைநம்பிக்கு நூறுதடா வெண்ணெயும், நூறுதடா அக்காரவடிசிலும் ஸமர்ப்பிப்பதாக வாய்நேர்ந்து கொள்கிறார். 'பெரியாழ்வார் பெண்பிள்ளை ப்ரார்த்தித்தாளேயன்றி, ஸமர்ப்பித்தாளாகத் தெரியவில்லை; அவளுடைய ப்ரார்த்தனையை நிறைவேற்றுவது ப்ரபந்நகுலத்திலே தோன்றிய நம்முடைய கடமையாகும்' என்று சொல்லி ஸ்வாமி எம்பெருமானார் அழகருக்கு நூறுதடா வெண்ணெயும், அக்காரவடிசிலும் ஸமர்ப்பித்தும் கோயிலண்ணர் என்று ஆண்டாளால் அன்புடன் அழைக்கப் பெற்றதும் அனைவரும் அறிந்ததேயாம்.

பத்தாம் திருமொழி – கார்க்கோடல்

கீழ்த்திருமொழியில், "செங்கட்கருமுகிலின் திருவுருப்போல் மலர்மேல் தொங்கிய வண்டினங்காள்..... எனக்கோர் சரண் சாற்றுமினே' (9–5) என்று நாய்ச்சியார் வண்டுகள் முதலானவற்றின் காலிலே விழுந்தும், எம்பெருமான் வந்து முகம் காட்டிற்றிலன். அவன் நேரேவந்து முகம் காட்டினாலோ, அல்லது அவன் வரப்போகிறான் என்பதை உணர்த்தும் அடையாளங்கள்

உண்டானாலோதான், உயிர்வாழலாம் என்னும்படி ஆண்டாளுக்கு ஆற்றாமை கரைபுரண்டது. கார் காலத்தில் பூக்கள் எங்கும் மலர்ந்து, எம்பெருமானுடைய அவயவ அழகு, திருமேனி ஆகியவற்றை நினைவூட்டிக் கொண்டிருந்தன. இனி, உயிர்வாழவேண்டுமானால் 'அடியார்களைக் கைவிடமாட்டேன்' என்ற அவன் வார்த்தையையும், பெரியாழ்வார் ஸம்பந்தத்தையுமே நம்பியிருக்கவேண்டும். 'ந மே மோகம் வசோ பவேத்' (என் வார்த்தை வீணாகாது) என்ற அவன் வார்த்தையைக் கொண்டு வாழலாமென்றால், ஸ்வதந்த்ரனானவவனை இவ்வார்த்தை கொண்டு நிர்பந்திக்க முடியாது. அவன் வார்த்தை தப்பினாலும், பெரியாழ்வார் ஸம்பந்தம் பேற்றைத் தராமல் போகாது. அதுவும் பலிக்காமற் போகுமோ என்ற ஐயம் ஆண்டாளுக்கு ஏற்பட்டு, 'மற்றவையெல்லாம் தப்பினாலும் பெரியாழ்வாரோடுண்டான ஸம்பந்தம் பழுதாகாது; அது எம்பெருமானுடைய ஸ்வாதந்த்ர்யத்தையும் மாற்றி, நம்மை அவன் திருவடிகளிலே சேர்த்தல்லது விடாது' என்று உறுதி பூண்டு தான் உயிர்தரித் திருந்தமையைச் சொல்கிறாள் பத்தாம் திருமொழியில்.

எம்பெருமான் 'ந த்யஜேயம்' (கைவிட மாட்டேன்) என்றாலும், சேதநனை எம்பெருமானோடு சேர்ப்பதற்கு புருஷகாரபூதரான ஆசார்யர் வேண்டும் என்பது இத்திருமொழியின் ஸாரார்த்தமாகும்.

பதினோராம் திருமொழி - தாமுகக்கும்

எம்பெருமான் வந்து முகங்காட்டாமையாலே, ஆண்டாள் மிகவும் அவஸந்நையாய்க் கிடந்தாள். அர்ஜுநனுடைய அம்புகளாலே அடிபட்டு, பாணப் படுக்கையில் கிடந்த பீஷ்மரைப் போலே, எம்பெருமானை நினைவுபடுத்தும் பொருள்களாலே மிகவும் நலிவுபட்டுக் கிடந்த நாய்ச்சியாரைக் காண, தாய்மார்களும் தோழிமார்களும் மற்றுமுண்டானவர்களும் திரண்டு வந்தார்கள். நாய்ச்சியார் அவர்களைப் பார்த்து "பெரியாழ்வார் ஸம்பந்தம் பேற்றுக்கு உடலென்றிருந்தேன்; திருவரங்கன் என்னுடைய வளைகளும் கழலும்படி செய்துவிட்டான். ஸீதாப் பிராட்டிக்காக உண்ணாது உறங்காது ஒலிகடலை ஊடறுத்து (இடைவெளியறும்படி அணைகட்டி)த் தான் பட்டபாடுகளை நினைக்காமல், நான் படும் பாடுகளைப் பார்த்து உகக்கிறான். நான் அவனை மறந்து நிம்மதியாக விருக்கலாமென்றால், அவனுடைய குணங்களும், சேஷ்டிதங்களும் என்னால் மறக்க வொண்ணாதவையாய் உள்ளன" என்கிறார். அவன் ருக்மிணிப் பிராட்டியை சிசுபாலனிடமிருந்து காப்பாற்றி, உதவிய செயல், பெண்பிறந்தார் எல்லார்க்கும் உதவிய செயலன்றோ என்றநுஸந்தித்து தரிக்கப்பார்க்கிறார் நாய்ச்சியார்.

"சரமச்லோகத்தின் பொருளைக்கேட்டு, அதிலேயே ஊன்றியிருக்கும் பெரியாழ்வார் ஸம்பந்தத்தாலேயே எம்பெருமானை உகந்திருக்கும் என்னை, பெரியாழ்வார் ஸம்பந்தத்தையும், 'தம்மையுகந்தாரைத் தாம் உகக்கவேணும்' என்னும் நியதியையும் மீறி எம்பெருமான் கைவிட்டானானால், அவனை ஆராலே நிர்பந்திக்க முடியும்" என்று கூறி, இத்திருமொழியைத் தலைக்கட்டுகிறாள் ஆண்டாள்.

பன்னிரண்டாம் திருமொழி - மற்றிருந்தீர்கட்கு

ஆண்டாள் நம்பிக்கையோடிருந்தும், நம்பெருமாள் விரைந்து வந்து வ்யஸநத்தைப் போக்கக் கண்டிலள். அவன் வராவிடிலும், அவன் வரும்வரை பொறுத்திருக்கக் கூடியவளல்லளிவள். உடனே அவனை அடையவேண்டு மென்னும் ப்ராப்யத்வரையாலே, ஸ்வரூபத்திற்குச் சேராதனவற்றைச் செய்தாவது, அவன் முகத்திலே விழிக்க வேண்டுமென்று பார்க்கிறாள் ஆண்டாள்.

தானே சென்று அவன் முகத்திலே விழிப்பதற்கு, இவளுக்கு சக்தியில்லை. "மன்னுமதுரை தொடக்கமாக வண்துவராபதி தன்னளவும் தன்னைத் தமருய்த்துப் பெய்யவேண்டி" (12–10)

என்கிறபடியே அவன் பிறந்த மதுரைப்புறம், அவன் வளர்ந்த ஆய்ப்பாடி, அவன் எழுந்தருளியிருந்த நந்தகோபாலன் திருமாளிகை வாசல், அவனும் பெண்களுமாய்த் திளைத்த யமுனை, அவன் நெடுநோக்குக் கொள்ளும் பத்தவிலோசனம், பிலம்பன்தன்னைப் பலதேவன் வென்ற பாண்டிவடம், அவனெடுத்த கோவர்த்தனம், பதினாறாமாயிரவர் தேவிமாரொடு அவன் கொலு வீற்றிருந்த துவாரகை ஆகிய தலங்களுக்குத் தன்னைத் தன் உறவினர் கொண்டு போய்ச் சேர்க்கும்படி நாய்ச்சியார் இத்திருமொழியில் வேண்டுகிறார்.

பதின்மூன்றாம் திருமொழி - கண்ணனென்னும்

உறவுமுறையார், தன்னை, அவனுகந்தவிடங்களுக்குக் கொண்டு செல்ல வேண்டுமென்று விரும்பினாள் ஆண்டாள். இவளுடைய நிலையைப் பார்த்தவர்களுக்கு இவளை அழைத்துச் செல்ல காலில் பலமிருக்காது. செல்வதானால், ஒரு கட்டணத்திலே வைத்துக் கொண்டு செல்ல வேண்டும்; அப்படிப் போகும்வரை இவள் உயிர்தரித்திருக்கவேண்டும். ஏன் எனில்; உள்ளூரில் எழுந்தருளியுள்ள வடபெருங் கோயிலுடையானையே அவர்களால், இவளுக்கு ஸேவை பண்ணி வைக்க முடியாது.

கோயிலுக்குள் நுழைந்தால், நம்மைப் போலே அப்படியே எந்த மாற்றமும் இல்லாமல் திரும்பக்கூடியவளல்லளிவள்; வடபத்ரசாயியை ஸேவித்தமாத்ரத்தில், மயங்கி விழுவள். அதனால் ஆண்டாளுடைய பந்துக்கள், 'இவளை இழக்க வொண்ணாது' என்று, இவளைக் கோயிலுக்குள்ளே அழைத்துச் செல்லவே மாட்டார்களாம். அதனாலேயே இவள் ''வில்லிபுத்தூர் உறைவான்தன் பொன்னடி காண்பதோர் ஆசையினால் என்பொருகயற்கண் இணைதுஞ்சா'' **(5–5)** என்றருளினாள்.

'வடபெருங்கோயிலுடையானையே தரித்துநின்று வணங்கவியலாத இவளை, வடநாட்டிலுள்ள தலங்களுக்கு அழைத்துச் செல்வதெப்படி**?**' என்று உறவினர்கள் தயங்கினார்கள். அப்போது இவள் – அவர்களைப் பார்த்து, 'என்னை உயிர்தரிக்கச் செய்ய நினைத்தீர்களாகில், அவன் திருமேனியோடு தொடர்புடையதொன்றைக் கொணர்ந்து, அதனை நான் தொடும்படிசெய்து, என்னைக் காக்கப் பாருங்கோள்' என்கிறாள்.

இத்திருமொழியில், வாய்கொண்டு சொல்லவொண்ணாத வ்யஸநத்தை யடைந்தாள் ஆண்டாள். கறுத்த காளை போன்ற கண்ணனுடைய கடைக்கண் பார்வையாகிற அம்பினாலே நெஞ்சிலே அடிக்கப்பெற்று, நாலடி நடக்கவும் முடியாதபடி எலும்புமூட்டுகள் குலைந்து, 'இனி இவளை ஓர் அவயவி (அவயவங்களோடு சேர்ந்தவள்) என்று காணமுடியாது' என்னும் நிலையையடைந்தாள் கோதை. ''புடையும் பெயரகில்லேன் நான்'' **(13–6)** என்று இடம்வலம் புரண்டு படுக்கவும் இயலாதவளானாள்.

'கண்ணபிரானோ அழுதாலும், தொழுதாலும் தன் உருவைக் காட்டுகிறானில்லை; ஆகையால் தாய்மார்களே! நீங்கள், அவனுடைய அமுதத் திருவாயில் ஊறுகிற உமிழ்நீரையாவது கொண்டுவந்து நான் பருகும்படிசெய்து, எனது உடல் உலர்ந்து போகாதபடி நோக்கி, எனது களைப்பை நீக்குங்கோள்; நெடுமால் ஊதிவருகின்ற புல்லாங்குழலின் துளைகளிலிருந்து வெளிவரும்

நீரைக் கொண்டுவந்து என் முகத்திலே தடவுங்கோள்; என்னுடைய திருமுலைத் தடத்தை எம்பெருமானுடைய கற்பகக் கிளைபோன்ற திருத்தோளோடே சேர்த்து அணைய அமுக்கிக் கட்டுங்கோள்' என்று ஆற்றாமை அறவிஞ்சி அழுது அலற்றுகிறாள். ''உளளோ விலளோ'' **(13–8)** (இருக்கிறாளோ, இல்லையோ) என்னும் நிலை அடைந்தாள்.

பதினான்காம் திருமொழி: பட்டிமேய்ந்தோர்

இத்திருமொழியில், ஆண்டாளுக்கு எம்பெருமானைப் பெற்றல்லது, தரிக்க வொண்ணாதபடியான நிலை உண்டாயிற்று. இவளுக்கு ஆற்றாமை அறவிஞ்சிச் சென்றாலும், பேற்றையடையும்போது பரமபக்தி தலையெடுத்திருக்க வேணுமென்று, இதுவரை காலம் தாழ்த்தினானவன். எம்பெருமானைப் பெற்றால் உயிர்வாழ்வது, பெறாவிடில் முடிவது என்னும் நிலை ஏற்பட்டது. பரமபக்தி தலையெடுத்தவாறே, அவன் வந்து முகம்காட்டி ஆட்கொண்டான்.

தனக்குப் பிறந்த பரமபக்தியும், அந்தப் பரமபக்திக்குச் சேரத் தான் பெற்றபேறும் இவ்வுலகிலே காணக்கூடியதல்லாமையாலே, இத்திருமொழியிலுள்ள பாசுரங்கள் ஒவ்வொன்றிலும், முற்பாதியில், "கண்டீரே" என்று கேட்கிறவர்கள் பேச்சாலே, அவனைக் கண்டல்லது தரிக்கவொண்ணாதபடியான தம்முடைய பரமபக்தியையும், பிற்பாதியில் "கண்டோமே" என்று தான் பெற்ற பேற்றையும் சொல்லி ஆண்டாள் ப்ரபந்தத்தைத் தலைக்கட்டுகிறாள். ஆய்ச்சி பாவனையில் திருமொழிபாடினாலும், சாற்றுப் பாசுரத்தில் தாமான தன்மையில் தலையெடுத்து 'விட்டுசித்தன் கோதை' என்று இவளால் பெரியாழ்வார் ஸம்பந்தத்தைச் சொல்லா திருக்கவொண்ணாது.

ஆசார்யாபிமாந நிஷ்டையில் ஊன்றியவள் ஆண்டாள். இவளுடைய நாச்சியார் திருமொழியை முழுமையாக அநுபவிக்கப் பெற்றிலோமாயினும், ஸ்தாலீபுலாகந்யாயத்தை (ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்கிற நியாயத்தை)க் கொண்டு, ஒரு பாசுரத்தையாவது விரிவாக அநுபவிப்போம்.

"நல்லவென் தோழீ! நாகணைமிசை நம்பரர்
செல்வர் பெரியர் சிறுமானிடவர் நாம் செய்வதென்
வில்லிபுதுவை விட்டுசித்தர் தங்கள் தேவரை
வல்லபரிசு வருவிப்பரேல் அது காண்டுமே." (10–10)

இப்பாசுரத்தில் ஆண்டாளுடைய தோழியானவள், இவளுடைய நிலை கண்டு, இவளைக் காட்டிலும் மிகுந்த வருத்தமடைந்து, 'இவள் உயிர் வாழ்வதற்கு ஒரு வழியும் தெரியவில்லையே' என்று கலங்குவது கண்ட கோதை – 'நீ பயப்பட வேண்டா; நாம் வாழ்வதற்கு ஓர் உபாயமுள்ளது; நம் ஆசார்யரான பெரியாழ்வார் நிச்சயம் எம்பெருமானை வரவழைத்துக் கொடுப்பர்' என்கிறாள்.

நல்லவென்தோழீ! – என்னைவிட என் இழப்பைக் கண்டு நொந்திருக்கும் தோழியே! நாகணைமிசைநம்பரர் – பர்யங்கவித்யையில் பரமாத்மாவை 'அநந்தசாயி' என்று கூறுகையாலே, ஆதி சேஷன் மேலே சயநித்திருக்கும் பெருமையுடையவர். நம்பரர் – "நாராயண பரம்ப்ரஹ்ம தத்த்வம் நாராயண: பர:" (தை.நா. –11) (நாராயணனே பரப்ரஹ்மம்; நாராயணனே மேலான உண்மைப் பொருள்) முதலான வேதாந்த வாக்யங்களாலே ப்ரஸித்தமான மேன்மையுடையவர். செல்வர் – திருவின் நாயகர். பெரியர் – பிராட்டிக்கு மணவாளராயிருப்பதாலேயே அனைவரிலும் பெரியவர். சிறுமானிடவர் நாம் – இப்படிப்பெருமைபெற்ற அறப்பெரியவரான அவருக்கும், மிகத் தாழ்ந்தவர்களான நமக்கும் பர்வதத்திற்கும் பரமாணுவிற்கு மிடையேயுண்டான வேற்றுமையுள்ளது. அவர் நமக்கு அணுகக் கூடியவரல்லர். நாம் தேவஜாதியிலே பிறந்து, அவ்வெம்பெருமானைச் சிறிது நெருங்கி நிற்பவர்களும் அல்லோம்; ஜ்ஞாநிகளாய் எம்பெருமானைக் கிட்டியிருப்பவர்களும் அல்லோம்; பேரறிவு படைத்திருந்தும், அறிவற்ற பொருளைப்போலே, படுக்கையாகவிருந்து எம்பெருமானை அணைந்து கிடக்கும் திருவநந்தாழ்வானைப் போன்றவர்களும் அல்லோம்; இடக்கையும் வலக்கையும் அறியாதிருந்தும் கண்ணபிரானை அணைந்து நின்ற ஆய்ச்சிகளும் அல்லோம்; மிகத் தாழ்ந்த மனிதர்களாகவன்றோ விருக்கின்றோம் நாம். செய்வதென்? – 'அடியார்களைக் கைவிடமாட்டேன்'

என்றோர் வார்த்தையை அவர் முன்பொருக்கால் சொல்லிவைத்தது கொண்டு, நாம் அவரை நிர்பந்திக்க முடியுமா?

'அப்படியானால் நாம் பகவத் விஷயத்தை இழந்துவிடவேண்டியது தானா' என்று தோழியானவள் கேட்க, அதற்கு ஆண்டாள் 'நாம் இழக்கவேண்டியதில்லை; அவனை அடைவதற்கு ஓர் உபாயம் உள்ளது' என்கிறாள் மேல் –

வில்லிபுதுவை விட்டுசித்தர் தங்கள் தேவரை – சேதநர்கள் அனைவர்க்கும் பொதுவானவர் என்பதனால், நாம் எம்பெருமானைப் பற்றுகிறோமல்லோம். நம் ஆசார்யரான பெரியாழ்வார் உகந்த வஸ்து என்றாயிற்று நாம் அவரை உகக்கிறோம். நம்முடைய ஆசார்யரான பெரியாழ்வாரே நமக்குப் பேற்றை நல்கும் உபாயமுமாவார்.

விஷ்ணுவை எப்பொழுதும் உள்ளத்திலே கொண்டிருப்பவர் அவர். 'அனந்தன்பாலும் கருடன்பாலும் ஐது நொய்தாக வைத்து என் மனந்தனுள்ளே வந்து வைகி" (பெரியாழ்வார் திருமொழி **5–4–1)** என்கிறபடியே திருவடி, திருவநந்தாழ்வானைவிடப் பெரியாழ்வாரிடம் மிகுந்த அன்புகொண்டு, அவர் திருவுள்ளத்திலே உகந்து எழுந்தருளியிருப்பவன் எம்பெருமான். பெரியாழ்வார் இட்டவழக்காயிருப்பவன் அவன். பெரியாழ்வாரைக் கொண்டு அவனை ஸுலபமாகப் பெற்றுவிடலாம்.

வல்லபரிசு வருவிப்பரேல் – பெரியாழ்வார் எம்பெருமானை வரவழைப்பதற்குப் பல வழிகளுண்டு. அவர் 'நாரணா! நீராடவாராய்' என்றாலும், 'செண்பகப் பூச்சூட்டவராய்' என்றாலும், 'அழகனே! காப்பிடவராய்' என்றாலும் எம்பெருமானால் வாராதிருக்க முடியாது. தகுந்த வகைகளாலே, பெரியாழ்வார் எம்பெருமானை வருவிப்பரானால். அது காண்டுமே! –அவ்வழியாலே, நாம் எம்பெருமானைக் காண்போம். ஆதலால், நாம் அவனை அடையப்பெறுவது உறுதி என்கிறாள் ஆண்டாள். ஆசார்யாபிமாநமே பேற்றுக்கு உடலென்று அறுதியிட்ட இப்பாசுரம் நாய்ச்சியார் திருமொழியின் ஸாரமென்று கொள்ளத்தகும்.

ஆக, இப்ரபந்தத்தின் முதல் திருமொழியிலே காம ஸமாச்ரயணம் பண்ணி, இரண்டாம் திருமொழியில் சிற்றிலிழைத்து, மூன்றாம் திருமொழியில் பனிநீராடி, நாலாம் திருமொழியில் கூடலிழைத்து, ஐந்தாம் திருமொழியில் குயிலைக் கூவவேண்டி, ஆறாம் திருமொழியில் கண்டகனாவினைத் தோழிக்குச் சொல்லி உகந்து, ஏழாம் திருமொழியில் பகவதநுபவமிருக்கும்படியை பாஞ்சசன்னியத்திடம் கேட்டு, எட்டாம் திருமொழியில் திருவேங்கடமுடையானிடம் மேகங்களைத் தூதுவிடுத்து, ஒன்பதாம் திருமொழியில் மாலிருஞ்சோலைநின்ற சுந்தரனைத் தொகுத்துரைத்து, பத்தாம் திருமொழியில் பெரியாழ்வார் வயிற்றில் பிறப்பு பேற்றுக்குடலென்றறுதியிட்டு, பதினோராம் திருமொழியில் 'நம்மைப் போன்ற சில பெண்களுக்கு உதவியவன் நம் கார்யம் செய்யாதொழியான்' என்றிருந்து, பன்னிரண்டாம் திருமொழியில் அவனிருந்த தேசத்திலே கொடுபோய்ச் சேர்க்க வேண்டி, பதின்மூன்றாம் திருமொழியில் அவனோடு தொடர்புடையதொன்றைக் கொண்டு வந்து தம்மீதிட்டு உயிர்ப்பிக்க வேண்டி, பதினாலாந் திருமொழியில் பரமபக்தி தலையெடுத்துப் பேறு பெற்றபடியைப் பேசித்தலைகட்டுகிறாள் ஆண்டாள்.

ஸ்வாதந்த்ரியம் தலையெடுத்தவர்கள் இந்நாய்ச்சியாருடைய பாசுரங்களைக் கேட்கைக்கு அதிகாரிகளல்லர்; பக்தி தலையெடுத்தவர்களே கேட்கவேணும்; "பத்து ஆழ்வார்களுடைய ஸாரபூதையான தானே சொல்லித் தானே கேட்குமித்தனை" என்பராம் எம்பெருமானார். இப்படிப் பெருமை படைத்தவளான ஆண்டாளுடைய திருவடிகள் வாழி வாழி வாழி என்று வாழ்த்துகின்றோம்.

நினைவில் நிற்பவர்கள் – 4

சதாபிஷேகம் கோவிந்த நரஸிம்மாசார்ய ஸ்வாமி

முதுமுனைவர் ம.அ. வேங்கடக்ருஷ்ணன்

திருநாராயணபுரம் அனந்தாண்பிள்ளை பிள்ளைலோகாசார்யர் சதாபிஷேகம் குடும்பத்தில் அவதரித்தவரான கோவிந்த நரஸிம்மாசாரியர் ஸ்வாமி, தமக்கென்று எதையும் விரும்பாமல் கைங்கர்யம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்தவர். உபந்யாஸங்களில் தமக்குக் கிடைத்த ஸம்பாவனைகள் அனைத்தையும் கைங்கர்யங்களுக்கே செலவிட்டவர் அவர்.



திருவல்லிக்கேணியில் பகவத்விஷய காலக்ஷேபம் ஸாதித்தபோது ஸமர்ப்பித்த ஸம்பாவனைகள் அனைத்தையும் ஆழ்வார் திருநகரி மணவாளமாமுனிகள் ஸன்னிதி ஜீர்ணோத்தாரணத்திற்கே செலவழித்துவிட்டார். அடியேனுக்காகவே ஸ்ரீரங்கத்திலிருந்து திருவல்லிக்கேணிக்கு எழுந்தருளி, அடியேனுடைய இல்லத்திலேயே தங்கியிருந்து ஏறக்குறைய மூன்று வருடங்கள் பகவத்விஷய காலக்ஷேபம் ஸாதித்தார். மிகப் பெரிய வித்வானாகிய அவர் நம்மிடம் எப்படிப் பழகுவாரோ என்ற அச்சத்துடனே இருந்த எனக்கு இரண்டு நாள்களுக்குள் அச்சம் விலகி விட்டது. அந்த அளவிற்கு மிகவும் எளிமையாகப் பழகத்தொடங்கிவிட்டார். அடியேனிடம் மட்டுமல்ல. அடியேனுடைய அகத்திலிருந்த குழந்தைகளுடன் கூடச் சரிசமமாக விளையாடுவார். அடியேன் உள்பட, குடும்பத்தினர் அனைவரும் அவரை 'ஸ்வாமி' என்றுகூட அழைத்தது கிடையாது. அவரை 'மாமா' என்றும் அவருடைய தேவியாரை 'மாமி' என்றும் தான் அழைப்போம். அந்த அளவிற்கு நெருங்கிய உறவினரைப் போல அவர்கள் இருவரும் அன்பு செலுத்தினர்.

பிரதிதினமும் காலை ஏழு மணிமுதல் ஒன்பது மணிவரை நம்மாழ்வார் ஸன்னிதியில் பகவத்விஷய காலக்ஷேபம் ஸாதிப்பார். மிகக் கடினமான விஷயங்களையும் நன்கு புரியும்வகையில் உதாரணங்களுடன், நகைச்சுவையோடு விளக்கியருள்வார். ஏறக்குறைய நூறுபேர் அந்த காலக்ஷேப கோஷ்டியில் அந்வயித்தனர். காலக்ஷேபம் நடைபெற்றது இப்படி ஒருநாளைக்கு இரண்டு மணிநேரம்தான் என்றாலும், ஸ்வாமி அடியேனுடைய இல்லத்திலேயே தங்கியிருந்த படியால் பல நன்மைகள் ஏற்பட்டன.



அப்போது வாகம்ருதவர்ஷீ ஸ்ரீ உ.வே. வேளுக்குடி வரதாசார்ய ஸ்வாமி

மாலை வேளைகளில் திருவல்லிக்கேணி வானமாமலை மடத்தில் காலக்ஷேபம் ஸாதித்து வந்தபடியால், ஸ்ரீசதாபிஷேகம் ஸ்வாமியோடு உரையாடுவதற்கு அடியேனுடைய இல்லத்திற்கு எழுந்தருளிவிடுவார். அரிய பெரிய ஸம்ப்ரதாய விஷயங்களையெல்லாம் அம்மஹாவித்வான்கள் இருவரும் சர்ச்சை செய்வதை அடியேனும் கேட்டுக் கொண்டிருப்பேன். (ஸ்ரீவசனபூஷணத்தில் ஆய் ஜநந்யாசார்ய ஸ்வாமி வ்யாக்யானத்திற்கும் மணவாளமாமுனிகள் வ்யாக்யானத்திற்கும் உள்ள வேறுபாடுகளைப் பற்றி இருவரும் செய்த சர்ச்சைகள் இன்றும் நினைவில் உள்ளன.) வாகம்ருதவர்ஷீஸ்வாமி சென்ற பிறகும்கூட அவ்விஷயங்களைப் பற்றி அடியேனிடம் விளக்கிக் கொண்டிருப்பார் ஸ்ரீசதாபிஷேகம் ஸ்வாமி. உண்ணும் நேரமும் உறங்கும் நேரமும் தவிர மற்ற நேரங்களிலெல்லாம் ஸம்ப்ரதாய விஷயங்களையே பேசிக்கொண்டிருப்பார். பல நாள்கள் இரவு பன்னிரண்டு மணியைக் கடந்து விட்டபோதும் பேசிக்கொண்டிருப்பார். அடியேனே, நாழிகையாகிவிட்டது என்று கூறினால்தான் விடுவார். இப்படியாக, காலக்ஷேபத்தில் அவரிடம் கற்றது கால்பங்கு என்றால், அவரிடம் உரையாடிக் கொண்டிருந்ததால் தெரிந்து கொண்டது முக்கால்பங்கு என்பதுதான் உண்மை. ஸம்ப்ரதாய விஷயங்களை அடியேன் முறையாகத் தெரிந்து கொண்டதற்கு அவரே காரணம் என்பதை அவரிடம் கூறியபோது, "ஏற்கெனவே ஸ்ரீகாஞ்சீ ஸ்வாமி உன்னைக் கடாக்ஷித்திருக்கிறார்; அதனை நான் உறுதிப்படுத்தியிருக்கிறேன் அவ்வளவே" என்பார்.



ஸ்ரீகாஞ்சீஸ்வாமி எப்படி அடியேனைப் பலவிதங்களில் திருத்திப் பணிகொண்டாரோ அதேபோல் சதாபிஷேகம் ஸ்வாமியும் அடியேனைப் பலவிதங்களில் உரிமையுடன் திருத்திப் பணிகொண்டார். ஏதாவது ஒரு விஷயத்தில் கண்டிக்க நேர்ந்து விட்டால் சிறிதும் தாக்ஷிண்யம் பாராமல் நறுக்கென்று கூறிவிடுவார். தினந்தோறும் பன்னிரண்டு திருமண் இட்டுக் கொள்ளவேண்டும் என்று அவர் நியமித்தபோது அதற்கு நேரமாகுமே என்று அடியேன் கூறினேன். "கிராப் வைத்துக் கொண்டிருப்பவர்கள் அத்தனை பேரும் தினந்தோறும் முகக்ஷவரம் செய்துகொள்கிறார்களே! அதற்கு நேரமாகிறதே என்று நினைக்கிறார்களோ? இல்லையே! பன்னிரண்டு திருமண் இட்டுக் கொள்வதற்குமட்டும் நேரம் இல்லாமல் போய்விடுகிறதோ? நாளை முதல் இட்டுக்கொண்டு வா" என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டார். இதுபோல் பல நிகழ்ச்சிகளை அடுக்கிக் கொண்டே போகலாம்.


திவ்யதேசங்களை ஜீர்ணோத்தாரணம் செய்வதில் அவருக்கு மிகுந்த ஈடுபாடு இருந்தது. சொல் கட்டடத்தில் வல்லவரான அவர் கல்கட்டடங்களைக் கட்டுவதிலும் வல்லவராகத் திகழ்ந்தார். கோயில், திருமலை, ஆழ்வார் திருநகரி ஆகிய திவ்யதேசங்களில் மணவாளமாமுனிகள் ஸன்னிதிகளை ஜீர்ணோத்தாரணம் செய்து ஸம்ப்ரோக்ஷணங்களையும்

மிகச் சிறப்பாக நடத்தினார். ஆழ்வார் திருநகரியில் ஆதிநாதர் ஆழ்வார் திருக்கோயிலை அவர் மிக அற்புதமாக ஜீர்ணோத்தாரணம் செய்து ஸம்ப்ரோக்ஷணத்தையும் வைணவ உலகமே வியக்குமளவிற்கு மிகச் சிறப்பாக நடத்தினார்.

ஜீர்ணோத்தாரண ஸமயத்தில் பல பல பிரச்னைகள் ஏற்பட்டபோது, அடியேனுக்குக் கடிதம் எழுதி உடனடியாக அந்தச் சிக்கலை நீக்க வழி செய்ய வேண்டும் என்பார். உடனே அடியேன் அறநிலையத்துறை ஆணையரைச் சந்தித்து விஷயங்களை விளக்கித் தகுந்த உத்தரவுகளைப் பெற்று அனுப்பிவைப்பேன். அப்போது அவர் அடியேனுக்கு எழுதிய நூற்றுக் கணக்கான கடிதங்களை இன்றைக்கும் பொக்கிஷமாகப் பாதுகாத்து வருகிறேன்.

மிக நெருங்கிப் பழகியதன் காரணமாக அவர் அடியேனைத் தம்முடைய மகனாகக் கூறுவார். அவருடைய தேவியாரோ ஸ்ரீமதி பூமாவைத் தன்னுடைய மகளாகக் கூறுவார். ஒருமுறை அடியேனுக்கு எழுதியிருந்த கடிதத்தில் ஸ்ரீசதாபிஷேகம் ஸ்வாமி பின்வருமாறு எழுதியிருந்தார்.


"ஸௌ பூமாவின் லெட்டரைப் படித்தேன். உன்னைப்போல ஒரு பிள்ளையையும் அவளைப் போல ஒரு பெண்ணையும் பெறக் கொடுத்து வைத்திருக்க வேண்டும். இதில் ஓர் ஆச்சர்யம். என் அபிமான புத்ரன் நீ. இவள் புத்ரி ஸௌ. பூமா. ஆகவே நீங்கள் தம்பதிகாக இருப்பதிலும் பாதகம் ஒன்றுமில்லை. தம்பதிகளில் ஆளுக்கொருத்தரை அபிமானிப்பதில் இப்படி ஒரு ஸௌகர்யமுண்டு. என் பிள்ளைக்கு எவளோ ஒருத்தி வந்து ஆட்டிப் படைக்க மாட்டாள். இவள் பெண்ணுக்கு எவனோ ஒருத்தன் வந்து படுத்தமாட்டான். ஆக எங்கள் இருவருக்கும் நீங்கள் பிள்ளையானாலும் பெண்ணானாலும் நிம்மதிக்குக் குறைவில்லை. திருவல்லிக்கேணியில் பகவத்விஷய வ்யாஜத்தால் நாங்கள் பெற்ற செல்வங்கள் நீங்கள் இருவருமே."



கிரந்த காலக்ஷேபம் ஸாதிப்பது என்பது ஒரு தனிக் கலை. அதில் மிக மிக வல்லவர் ஸ்ரீசதாபிஷேகம் ஸ்வாமி. வ்யாக்யான பங்கத்திகளை முறையா எப்படி அந்வயித்துப் பொருள் கொள்வது என்பதை ஸ்ரீ சதாபிஷேகம் ஸ்வாமிதான் அடியேனுக்கு நன்கு கற்றுக் கொடுத்தார். அதனையும் மிக மிக எளிமையாக மந்த மதிகளும் புரிந்து கொள்ளும் வகையில் ஸாதிப்பார். அதனால்தான் இன்றைக்கு எந்தப் பங்க்தியையும் நன்கு அன்வயித்துப் பொருள் கொள்ள முடிகின்றது.

அறியாக் காலத்துள்ளே அடிமைக்கண் அன்பு செய்வித்து, அடியேனுக்கு ஸம்ப்ரதாயத்தில் ருசியை உண்டாக்கினவர் ஸ்ரீகாஞ்சீ ஸ்வாமி. பணிமானம் பிழையாமே அடியேனைப் பணிகொண்டு ஸம்ப்ரதாய விஷயங்களை முறையாக வரியடைவே காலக்ஷேபம் சொல்லி முன்னோர் மொழிந்த முறைதப்பாமல் பேசும்படி அடியேனை ஆக்கியவர் ஸ்ரீ சதாபிஷேகம் ஸ்வாமியே ஆவார். எனவே ஸம்ப்ரதாயஞானத்தைப் பொறுத்தவரை, அடியேனை ஈன்ற முதல்தாயாக ஸ்ரீகாஞ்சீஸ்வாமியையும், வளர்த்த இதத்தாயாக ஸ்ரீசதாபிஷேகம் ஸ்வாமியையும்தான் கொண்டிருக்கிறேன்

ஸ்ரீ:



அயோத்யா ஸ்ரீ ராமஸ்வாமி தேவஸ்தான திருப்பவித்ரோத்ஸவம்

(அம்மாஜி மந்திர்), கோலாகாட், அயோத்யா

Local Office: Sri Saraswathi Bhandaram Committee,
16, Peyalwar Koil Street, Triplicane, Chennai 600 005.

ஸ்ரீராமபிரான் அவதரித்த திவ்யக்ஷேத்ரமான அயோத்யையில் ஸரயு நதிக்கரையில் ஸ்ரீராமபிரானுக்கு அற்புதமான ஒரு திருக்கோயிலை ஸ்ரீமான் உ.வே. யோகிபார்த்தஸாரதி ஐயங்கார் ஸ்வாமி சென்ற நூற்றாண்டியில் நிர்மணித்துள்ளார். அயோத்யையில் இத்திருக்கோயில் தென்னாட்டுப் பாணியில், மூலவர், உத்ஸவர், த்வஜஸ்தம்பம், விமானம் முதலிய வைபவங்களுடன் அமைந்துள்ளது. இத்திருக்கோயிலை ஸ்ரீஸரஸ்வதீபண்டாரம் கமிட்டி நிர்வகித்து வருகிறது. இங்கு எழுந்தருளியுள்ள ஸ்ரீராமபிரானுக்கு இவ்வருடம் பவித்ரோத்ஸவம் கீழ்க்கண்டபடி நடைபெறவிருக்கிறது.

பவித்ரோத்ஸவ நிகழ்ச்சி நிரல்

புரட்டாசி 30 (16-10-2024) புதன் கிழமை

மாலை அங்குரார்ப்பணம், ம்ருத்ஸங்க்ரஹணம், வேத திவ்யப்ரபந்த தொடக்கம்.

ஐப்பசி 1 (17-10-2024) வியாழக் கிழமை

காலை முதல் கால ஹோமம், ரக்ஷாபந்தனம், பவித்ரம் சாத்துதல்
மாலை இரண்டாம் கால ஹோமம், வேத பாராயணம் திவ்யப்ரபந்த ஸேவை.

ஐப்பசி 2 (18-10-2024) வெள்ளிக்கிழமை

காலை மூன்றாம் கால ஹோமம், வேத பாராயணம் திவ்யப்ரபந்த ஸேவை.
மாலை நான்காம் கால ஹோமம், வேத பாராயணம் திவ்யப்ரபந்த ஸேவை.

ஐப்பசி 3 (19-10-2024) சனிக்கிழமை

காலை ஸரயு நதியில் தீர்த்தவாரி, ஐந்தாம் கால ஹோமம்,
மஹா பூர்ணாஹுதி, வேத திவ்யப்ரபந்த சாற்றுமறை.

ஆர்வமுள்ள அன்பர்கள் இந்த உத்ஸவத்தில் நேரில் கலந்து கொண்டு ஸ்ரீராமபிரானுடைய அருளைப் பெறுமாறு பிரார்த்திக்கிறோம். தொடர்புக்கு - 9444144671 (WhatsApp only) இந்த உத்ஸவத்திற்கு நன்கொடைகளை கீழ்க்கண்ட வங்கிக் கணக்கில் செலுத்தலாம்:

Sri Sasraswathi Bhandaram Committee

Indian Bank Triplicane Brach S.B. A/c No.848266445 IFS Code: IDIB000T055

GEETACHARYAN, Registered with Registrar of News Paper for India. R.N.I. No. 33614/1978
Postal Registration Number: TN/CH (C)/576/2024-2026
Licensed to post without prepayment WPP No. TN/PMG(CCR)/WPP-651/2024-2026
Posted at Pathrika Channel Egmore RMS. Date of Publication: Second week of every month
Posted between 16-18 AUGUST 2024.

Edited & Published by Dr.M.A. Venkatakrishnan and Printed by G.Rajan at RNR Printers & Publishers
8, Thandavarayan Street, Triplicane, Chennai 600 005. Published at 7, South Mada Street, Triplicane, Chennai 600 005.